ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

OFFICE OF THE ... 1911 MADRAS.
66
4-1911

ருக்மணி கலியாணம்.

பக்தியுள்ளவர்கள் இதை வாங்கிப்பார்க்கவும்.

தி. தா. இலுப்பூர் உபாத்தியாயர்,

கண்ணாயிரம் பிள்ளையவர்களுடைய குமாரர்

மணப்பாறை மான்பூண்டி கல்லேந்திரசுவாமி

ஊர் பஜனைமடம் பக்தி பஜனைசம்பிரதாய

அரிநாமசங்கீர்த்தன புஸ்தகம், ௪௦-வது பக்கம்

ரிஜிஸ்ட் அறிவிப்பிலடங்கிய விளம்பரப்படி கண்டிருந்த

ருக்மணி கல்யாணம்

ஸ்ரீரெங்கநாதன், ராஜகோபாலசுவாமி உத்திரவின்படிக்கி

பஜனைசம்பிரதாய வைணவாணந்த கீர்த்தனத்தின் விளம்பரத்தில்

கண்ட காலக்ஷேப்பாளான அக்கிராசனாதிபதிகளால்

பரிசோதிக்கப்பட்டு,

திருச்சி லக்ஷ்மி விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றன.

இதன் விலை அணா 8;

(Copy Right Registered.)

ஸ்ரீ

ஸ்ரீ மணவாளமாமுனியே நம:

பஜனை சம்ப்ரதாய-வைணவானந்த கீர்த்தனம்

நம்மாழ்வார் முதல்—மன்னார் கோவில் ராஜகோபால
சுவாமி கீர்த்தனங்களுக்குமுன்—னாக பாடும்.

நாமாவளி

1. ஆழ்வார் திருவடி—ப்பணிவோமே தினம்
ஆனந்தக்கூத்தாடி—த்துணிவோமே.
2. பாஷ்யங்காரபேர் சொல்லுங்கள்—வரும்
பாவங்களனைத்தும் வெல்லுங்கள்.
3. வரவரமுனிவரைவழுவோமே-ஸ்ரீ
வயணவரதாளில்—விழுவோமே.
4. மனக்கவலைதீர்க்க—நதிமனமே—நம்ம
மணவாள முனிதாளை—நதிமனமே.
5. திருப்பாவைமுப்பதை—ப்பாடுங்கள் ஆண்டாள்
திருவடிகதியென்று நாடுங்கள்.
6. ஆச்சாரியரே நமதுதெய்வம் அவர்
ஆனந்தத்திருத்தாளை—நாமுயவம்.
7. ஆரியர் திருச்சொல்லை வழுவோமே—என்றும்
ஆவலாய் அவர் தாளில் விழுவோமே.
8. பதிமர்கள் பணியும்மணவாளா திரு
பரமபதந்தரும்—குணவாளா.
9. அரங்கத்தில்வாழும் வெள்ளமுதே நல்ல
அடியாரருந்திய தெள்ளமுதே.
10. வேறுதுணையெனக்கிங்காரையா நின்னை
வேண்டுமடியென்முகம் பாரையா.
11. கிரிபைக்குடைபிடித்த கையனே நின்
கிருபைசெய்வாய் ராமையனே.
12. அண்டத்தை வாரியே உண்டவனே—மெய்
அடியாருள்ளத்தை கண்டவனே.
13. சதாபஜனைநின்று பண்ணினனே நின்
சரணமளிப்பாயென்று எண்ணினனே.
14. வேண்டுமடியேனை வந்தாளாயோ—இனி
வேகமாய்யென்குறை கேளாயோ.

15. சித்தம்வைத்துக்கண் பாராயோ—இச்
சிறியேனையனுதின—ங்காராயோ.

16. நின்னடியெனக்கருள் இல்லையா—உன்னை
நினைந்தும் நீ யின்னமும் வல்லையா.

17. கோரும் வரங்களைத்தந்தருளேத்திரு—
கோதண்டகையா நீ வந்தருளே

18. பாவத்தைப்போக்கிட இனிவாரும்—சிறு
பாலனெனக்கொன் வரந் தாரும்.

19. இராமபஜனைசெய்யும் நல்லீரே—ராம
நாஸனையாரச்சொல்வீரே.

20. அழுது புலம்புவது— தர்ம-ம-மா நின்
அடியேன்மீதினில் வர்ம-ம-மா.

21. தேன்மலர்சோலைசூழ—ஜெயரங்கா—முன்பு
தேவர்கள் தான்படும் பயபங்கா.

22. அரசனுக்குச்சூலம் தந்தவனே—அன்று
அசுரர்முன் தூணில்—வந்தவனே.

23. பட்சிவாகனமேறும் ஜெகநாதா—மெய்
பத்தனையாள மிகவாதா.

24. அத்திபின்முறைக்கேட்டு—காத்தவனே
அமரர்களிடர் அன்று தீர்த்தவனே.

25. பூதகிமுலைப்பாற் குடித்தவனே இந்த
பூமிமகிழவில்லை ஒடித்தவனே.

26. அரனனுமனுமன்மேல் ஏறும்பாதா வந்து
அடிக்கடி நின்னருள்—கூறும் நாதா.

27. ஆலிலைமேல் படுத்த ப-ரா-பரா
ஆரணங்கா ணு— த-ரா-த-ரா.

28. எந்தன்குறைகளை—இனிகேளாய் நான்
எண்ணினேநின்பதம்—வெகுநாளாய்.

29. என்று தனதடிமை யல்லவா—போய்
என்தாய் இடம்போய்—சொல்லவா

30. சண்டனணுகாமல் காத்தருளே—என்
சஞ்சலம்தீரக் கண்பாத்தருளே.

31. பங்கஜநாபாநின்மேற் பாடினேன் தினம்
பஜித்து நின்று கூத்தாடினேனே.

32. சங்கரன்னிடை தீர்க்க சென்றவனே பின்பு
சற்பமாய் வந்தோனை வென்றவனே.

33. எண்ணினே நானுன்னை கோவிந்தா—யான்
பண்ணின பாவம் தீரும் கோவிந்தா.

34. சச்சிதாநந்தபவநாசா—மற்ற
சர்வஜீவஹிருதயவாசா.

35. திருயோசொல்—என் கொடுமை நான்
தீனரக்ஷகனே—யுன்னடிமை.
36. சங்கு சக்கரக்கையனே கோவிந்தா வந்து
தங்கும்படிக்கருள் செய் கோவிந்தா.
37. வந்தடைந்தே ராமச்சந்திரனே ஓடி
வந்தாளெனையதி சுந்திரனே.
38. ஆருமில்லாத நாயேன் கோவிந்தா வந்து
காருமிவ்வேளையென்னை கோவிந்தா.
39. அடியேனழைக்க வந்தருளே—நின்
அரவிந்தத்தாளை—தந்தருளே.
40. நல்ல புஜங்கா நடராஜா—திரு
தில்லையில்வாழும்—ஜெகதீசா.
41. பாவத்தைவந்து நீ போக்காயோ—நின்
பாதத்துக் கென்னையா—ளாக்காயோ.
42. அம்புஜபாதாமுனி நாதா—நின்
அடியேனையாள—இனிவாதா
43. ஞானகைவல்லிய நவநீதா ஓ
தீனதயாளா தவநாதா.
44. தில்லைசபைதனக்கதிபதியே எங்கள்
திருமகள் மகிழுங்—குணநிதியே.
45. அரிகரி அரிகரி கோவிந்தா—நல்ல
அழகுள்ள தில்லை கோவிந்தா.
46. பத்தஜனப்ரியசேகறனே—ஞான
தத்வாமிரசுறச சாகரனே.

வைணவானந்த நாமாவளி முற்றிற்று.

பல்லவி பெறுகில காம்போதி ஆதிதாளம்.

இந்தச்சம்சாறத்தால் யென்ன சுகம் அடைந்தாய்
எனலைகிறாய் நெஞ்சமே (இந்த சம்சா)

அனுபல்லவி.

சிந்தை வருந்தி பருந்துபோலே யலைந்து
அந்திபகலாக்காலம் அவமாக்கழிப்பதல்லால் (இந்த)

சரணங்கள்.

சண்டன் தூதர்களானபெண்டுபிள்ளைகளாலே
சாதகமுண்டோ துண்டோலேசம். நம்
பண்டு வினைகளாலே உரு கொண்டு வந்தவரல்லோ

பண்ணலாமோ இவர்கள் நேசம். அவர்கள்
கண்டு சக்கரையைப்போல் கொஞ்சுவார்களதை
கனவிலும் நம் பொன்றது நேசம். நம்மள்
மண்டைமடியும்வரை மதிமயங்கி இவற்கே
தொண்டு செய்தால் நம்மை துட்றுமே வெகுதோசம் (இந்த)
மடியில் கணமிருந்தால் வாசமட்டெதிர் வந்து
மனவி யடிபணிவாள் ஒருக்காலே சற்றே
மிடிவந்தகாலத்தில் அடே பயலே யென்று
மிஞ்சிடுவாள் கோபத்தாலே சற்றே
நொடிக்குள் லெக்ஷம் பொன்னை கொடுத்தபோதிலும்கூட
நொய்ய உரைப்பாள் மனக்குறைவாலே சற்றும்
விடிய விடிய தண்ணீர் விழமுக்கிரைத்ததினால் ஒரு
படி தானிய முண்டாமோ--பாறினிலப்படிப்போலே (சண்)
மாமன்மைத்துனன் கொல்லும்யேமன் ரூபமேயல்லா
மனமுண்டோ குணமுண்டோ அனுமாத்திரம்
ஸ்ரீ ராமதாசன் திவ்வியநாம பஜனை செய்தால்
ராவணன்போல அதில் சாத்திரம்
கோமுகாவியாக்கிரம்போல்
நம்மைக்கண்டாலவர்க்கு கோவைக்கனிபோலாகும் நேத்திரம்
இந்தயாமரர்களை நாம் பந்துவென்று நம்பினால்
க்ஷேமமெப்படியுண்டாம் சீச்சீ போ மலமூத்திரம். (இந்த)

நாமாவளி.

நம்பாதே நம்பாதே இந்த வேசக்காரர்களை நம்பாதே
மேலெங்கும் சாம்பலை பூசி— அவர் சாம்பசிவனையேசி (நம்)
நெத்தியில்நாமத்தைப்போட்டு— அவர்சித்தத்திதாட்டோட்டு(நம்
நெத்தியில் கரிகோடுமிட்டி— அவர் தாறகம் அரியாதமட்டி (நம)
கழுத்திலேதாவடம் அணிவான்-மனதிலே அபகடம்நினைப்பான்
படிக்கிற சாஸ்திரகட்டு —அவர் குடிக்கிற சாருயபொட்டி (நம)
கையிலே சிவசூஷ்த்திரமா அவர் பொய்யிலேமுதத்திரமாம.நம
[பாதே நம்பாதே
நம்புங்கள் நம்புங்கள் நம்மள் பிர்ம்மஸ்வரூபத்தை
நம்புங்கள் அவர் நற்கதி தந்து ரெக்ஷித்திடுவார். (நம்

பஜனை சம்ப்ரதாய வைணவானந்த கீர்த்தனம்.

முற்றிற்று.



ரைவதமகாராஜன் குமாரத்தி ரேபதியை துவாரகா புரி வசுதேவர்குமாரன் பலராமர் கலியாணசிறப்பு.

நேரிசைவெண்பா.

எங்கள்கதியே இராமாநுஜ முனியே
சங்கையெடுத்தாண்ட தவராஜா பொங்குபுகழ்
மங்கையர்கோ னிந்தமறையாயிர மனைத்தும்
தங்குமனம்நீ யெனக்குத்தா.

மாலைத்தனியே வழிபறிக்கவேணுமென்று
கோவிப்பதிவிருந்த கொற்றவனே வேலை
அனைத்தருளும் கையாலடியேன் வினையை
துணித்தருளவேணும் துணிந்து.

அல்லிநாட்டாமறைமேல் லாரணங்கினின் துணைவி
மல்லிநாடாண்டமடமயில் மெல்லியலாள்
ஆயர்குலவேந்த னாகத்தாள்தென்புதுவை
வேயர்பயந்தவிளக்கு.

சாவேரி ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

சரணம் சரணமம்மா கிருபைசெய்ய
தருணம் தருணமம்மா (சரணம் சரணம்)

அனுபல்லவி.

மருவும்மயமருளும் மாதாபிராமியை
மாமுனிவர்கள்போற்றும் மங்கைசரஸ்வதியை (சரணம்)

சரணம்.

சங்கைபலகைதன்னில் தயவுதயாநிதியை
சர்வகாலமும்சகலரும்புகழ்ந்துதி

மங்கையருடன்மாதர் அங்கங்குலுங்கசதிர்
ராடும்சமையவல்லி ஆனந்தரூபதி (சரணம்)

மாயவினையறுத்து மாதவருடன் கூடி
மகிழ்வாய்யென்னைநிதம்மகிழ்ச்சியுடனேபாட
தாயாகிநீயேவந்து தமையனுக்கருள்சூட
தயவுசெய்யும்படி கருணைபதங்கள்நாட (சரணம்)

ஆசைவலைக்குள்சிக்கி அகம்கொண்டுதிரியாமல்
ஆதிமூலமேயன்றி வேறொன்றும்குறியாமல்
தாசன்ராமதாசன் தாயார் ருக்மணிதன்னை
தான்வணங்கிபதம் சேர்க்கும்படிசொல்வீர்.

சரணம் சரணமம்மா கிருபைசெய்ய தருணம் தருணமம்மா.

இராகம்-கேதாரம்-திருவுடைதாளம்.

பல்லவி.

எங்கு ஓரடியாய் அளந்ததிருவடி
தாங்கியசதுர்முகன் அலம்பும்திருவடி
கெங்கைபூரித்துரைக்குந்திருவடி
கண்டு பணிந்தேனே (எங்கு)

அநுபல்லவி.

அண்டர்சேவித்துநிற்குந் திருவடி
தொண்டர்கள்பூஜித்து உகருந்திருவடி
தண்டைசிலம்புகள் அணிந்ததிருவடி
கண்டு பணிந்தேனே, (எங்கு)

சரணம்.

அகலிசாபத்தைதீர்த்ததிருவடி
சகலமுனிகளைகார்த்ததிருவடி
அகிலதாபத்தை யார்த்துந்திருவடி
கண்டுபணிந்தேனே. (எங்கு)

கானகந்தன்னில் அலைந்ததிருவடி
மான்பின்னோடும் நடந்ததிருவடி
தீனசபரியை கார்த்ததிருவடி
கண்டு பணிந்தேனே. (எங்கு)

நல்லபூமலரொத்ததிருவடி
பொல்லாசகடறை யுதைத்ததிருவடி

காளிங்கன்படத்தில் நின்றுடும்திருவடி
கண்டுபணிந்தேனே (எங்கு)
பிருந்தாவனத்தில் சஞ்சரித்ததிருவடி
விந்தையாய்பசு மேய்த்ததிருவடி
சொந்தகோபியர்கள் யுகந்ததிருவடி
கண்டுபணிந்தேனே ராமதாசன்கண்டுமகிழ்ந்தேனே.

பலராமர் திருமணம்.

விருத்தம்.

மலையதனைக்கொளுத்தியபின் மடையனன்று
மனமகிழ்ந்தேதன்னிடத்துக்குற்றுனென்று
கலையறிந்தசுகமுனி யவ்வாறுகூறக்
கனகமணிமுடியணிந்த வரயன்மேலும்
நிலையெதுவுங்கண்டிருக்கு நித்தியாநந்தன்
நின்சரிதையென்ன வெனதொடங்கிகேளும்
திலைதோளான்பலராமன் திருமணத்தைச்
செப்புவார்மகிமைதனை யொப்புவாரே.

இராகம்-பியாகுதாளம்-அடதாளசாபு.

பல்லவி.

பலராமன் கலியாணச்சிறப்பை
பகருவேன்கேளாய் நான்புகலுவேன்கேளாய்.

பலராமர் கலியாணசிறப்பு.

அநுபல்லவி.

நலமுடையராஜரெவரும் நாளுமேபுகழுவெகு
ரம்மியமாகவிவ்வுலகிலெங்குமேதிகழும்
புவியெங்குமேதிகழும் (பல)
விதிப்படியேதிருமணமுஞ்செய்துமுடித்தார்வந்து
விண்ணவரும்மண்ணவரும் விரும்பிப்படித்தார்
புகழ்சொல்லிப்படித்தார் (பல)
ரைவதனென்கிறவரசன் நாடியுகந்தான் தன்
நல்லபுத்திரி ரேவதியைக்காண மலர்ந்தான்
அகந்தானுமலர்ந்தான். (பல)

பண்டுபிரமதேவன் சொன்னபடிகளித்திட்டான் அந்தப்
பக்தன்ராமதாசனுங்கூடிபலராமர்க்களித்திட்டான்
பலராமர்க்களித்திட்டார்கள் (பலராமன்)
கலியாணச்சிறப்பைபகருவேன்கேளாய் நான்
புகழுவேன்கேளாய்—ஆழ்வார் ஆசாரியர்
ஆண்டாள் ஜீய்யர் பரமபாகவதசிகாமணிகள்
திவ்வியசரணம்

பலராமர் கலியாணசிறப்பு.

முற்றிற்று.

ருக்மணி கலியாணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

வசனம்.

இனிமேல் எம்பெருமானாகிய திருக்கண்ணன் உருக்மணிதேவி யைத் திருமணஞ் செய்தவிந்தையை சொல்லுகிறேன்கேளென்று சுக முனிவர் பரிச்சித்துக்குசொல்ல ஆரம்பித்தது.

விருத்தம்.

எண்டிசையும் புகழ்கின்ற பலராமர்கோ
இவ்வகையாய்த்திருமணஞ்செய்தான்பின்னர்
மண்டிவந்தசால்வாதி முதலானோரை
மாதவனுமொவ் வொருவராய்ச்செயிக்கக்
குண்டினபுரமாளும்—பீஷ்ம-ராஜன்
குமரியாம்-ருக்குமணியை க்கண்ணனுக்குப்
பண்டிணியகல்யாண நிகழ்ந்தவிந்தைப்
பகருவாற் பழமறையை நிகருவாரே.

இராகம்-காபு-ஆதிதாளம்.

பல்லவி.

வெல்லும்வெல்லும் வெல்லுமறசே வினைகள்விட்டு
நீங்கவின்று வெல்லும்வெல்லும் வெல்லுமறசே

அநுபல்லவி.

நல்லகதியுண்டாமந்த நாரயணனுடையகதையால் (வெ)

சரணம்,

கேள்க்ககேள்க்க—ஆனந்தம்பிறக்கும்
கேட்டவுடனே—கியானமந்திறக்கும்
வாட்கையான்—பொய்மைபறக்கும்
வாசுதேவனுடைய கதையால்
வெல்லும் வெல்லும் வெல்லுமறசே வினை

காணபூஷணமாய்—த்தரிக்கும்
காலபாசம்—வேரைப்பரிக்கும்
மறணஜனனவியாதியருக்கும்
மாதவருடைய கதையால் (வெல்லும்)

காணக்காண காக்ஷிக்கொடுக்கும்
கண்டவுடன் கங்கவலேவிடுக்கும்
பூணப்புது வுடையாக வடுக்கும்
புண்டரிகாக்ஷன் கதையால் (வெல்லும்)

புசிக்கபுசிக்க—ருசியேதளைக்கும்
புணிதருறவு தன்னே யழைக்கும்
நசிக்கவினைகள்—வறங்களிழைக்கும்
நமதுராமதாசன்கதையால் (வெல்லும்)

வசனம்.

உ-ருக்குமணிதேவியின் அவயஅலங்காரத்தை சொல்லுதல்.

விருத்தம்.

இன்னம் பலங்கள் யாவும்
ஏற்றமாய் பெறலாமென்று
மன்னவன் பீஷ்மனுக்குதித்த
மைந்தரை வருக்கும்பின்னல்
பொன்னெனதோன்றிவந்த

ருக்மணி கலியாணம்.

புனிதருக்மணியின் தேகம்
உன்னருமெழில் சேரரூபம்
ஓதுவான்—சாதுவானே

இராகம்-சஹானா-தாளம் சாபு.

பல்லவி.

செய்யானருக்மணி—சிறந்தவடிவினை
செப்புகிறேன்கேளும் வேந்தனேன்செப்புகிறேன்கேளும்.

அநுபல்லவி.

மெய்ப்பாம்கருமுகில் காணுமவள கூந்தல்
மின்பிரை நுதலில் லொக்கும்-புருவமுள்ள (செ)

சரணம்.

சேலைப்பழித்திடும் சிறந்தஇருவிழிகள்
சிமிழ்புறைநாசி மின்னாள்
மேலுமஞ்செங்கனிபோல் விளங்கும்அதரமொடு
வெண்டரள் நகைவிரை கமலவாயமன்னும் (செ)
வள்ளையிருசெவிகள் வயங்கும்பளிங்குக்கன்னம்
மதிமுகம்சங்குகண்டம்
ஒள்ளியமென்பணை யொக்கும்புயமொரு
உயர்கனக்கும்பஸ்தனமிலங்கும் (செ)
கர்ப்பகமென்கரம்—கடற்சுழிநிகருந்தி
காணருந்தி டியிடையாள்
அற்புதஇழவாழை யனையதொடையிரண்டு
அலவன்போல்முளங்காலும் மம்புயமலர்பாதம் (செ)
இன்பமோடனுதினம் இலங்குமிபோலங்கு
எழிலாகவே—வளரும்
அன்புடையவன்னளழகை—யவனிதன்னில்
ஆதிசேஷனாலும் அளவிடவொண்ணாத—(செ)

சீச-பத்தியம்.

சீதரனுக்கவள்மீது சித்தமேவியபின்பு
சித்திரவடிவங்கள் திகழலாச்சு
மாதவனுக்கவள்மீது மையல்மேவியபின்பு
மாள்விழியாளிடைக்கையுமாச்சு

ஆதிகோவிந்தனுக்கன்பு மேவியபின்பு
அளகபாரந்தனுக்கழகுமாச்சு
நீதிசேற்நாரணன் நெஞ்சுகந்திடபின்பு
நீலநேத்திரமுகம் நிறமதாச்சு
இப்படி இருவருக்கும் மன்திலேயிச்சையுண்டாய்
ஒப்பில்லாசுகுணலக்ஷணமர்தியோங்கிவளரச்
செப்புமாயவன்பாரியாய் ச்செகதலத்தில்
அப்பதி தன்னைசேரும் அதிசயம் அரைகுவேனே.
கன்னியருடன்கூடி விளையாடுங்காலையில்
கருதுவாளந்த ருக்குமணிமாது
அன்னமுண்டிடும்வேளை ஆகிருஷ்ணுவென்றவறை
அரைகுவாளந்த ருக்குமணிமாது
இன்னமும்ச்சப்பிற மஞ்சத்தில்படுத்தவரை
எண்ணுவாளந்த ருக்குமணிமாது
பொன்னின்மயில்போலுலவும் போதவரைநீதமாய்
போற்றுவாளந்த ருக்குமணிமாது
இந்தவிதமாய் யெக்காலமும் நினைந்து
விந்தையாய்ச்சுகமாகி நாள்தோறுமேபொருந்தி
தொந்தமாய்இருவரும் இந்ததொல்லுலகிலே
அந்தமாய்கூட்டிடும் ஆச்சரியம்சொல்லுவேனே

குண்டினபுறத்துக்கதிபதியாகிய பீஷ்மராசன் நிருப தேசத்து ராசாக்களையும் வரவழைத்து மந்திரிமார்களோடும் சபையாரோடும் ருக்குமணிதேவியை யாருக்கு பாணிக்கிரகம்பண்ணலாமென்றதற்கு சகலரும் துவாருகாபுரிவாசவனுக்கே கொடுப்பது நலமென்று கூற அதைகேட்டு பீஷ்மராசன் சந்தோஷப்படுவது.

விருத்தம்.

மாசில்லாருக்மணிக்கி பீஷ்மராசன்
மனஞ்செய்யும்—பருவந்தான் வந்ததென்று
ஆசில்லாக்கண்ணனுக்கு—த்தானளிக்க
அருகிருந்தசபையாரோ—டாலோசிக்க
ஏசில்லாசியலாரும்—மிதுவேநல்ல
எண்ணமெனவ்வர்களெல்லாம்நெஞ்சுகந்து
தூசில்லாகிருஷ்ணனுக்கு—க்கொடுக்கும்வாறுயத்
தூண்டுவார்அரசனையும்—வேண்டுவாரே—

இராகம்-இந்துஸ்தானி-காபி-ஆதிதாளம்.

இராஜனேநல்ல—யோசனைசெய்தீர்
நாடருமங்களமதையே—நன்னி
காசினியோர்கள்—கண்டுபணிந்திடும்
கண்ணனை—மருமகனாகவெண்ணி (இராஜ)
வசுதேவனுக்கும்—பீஷ்மனேயுமக்கும்
வாய்த்ததுநல்லசம்மந்தம்—ஐய்யா
அக்ரூரசம்மாரனுந்தனக்கேகொடுக்க
அனைவர்க்கும்—சம்மதமாம்மெய்யா (இராஜ)
துவாரகையென்னும்—வளர்நகர்தனையாளும்
துரையைவரவழைத்திடும்—பாரும்
அவருடைருக்மணியதிசியரூபத்திற்
கானவுன்வந்திடில் மணநேரும் (இராஜ)
பங்கஜநயனி வடிவினுக்கேற்ற
பகுந்திடும்ரூபன் அவன்தானந்தம்
செங்கமலக்கண்ணன் தனக்கிசைந்த
சேடிருக்மணியிவள் தான்சொந்தம் (இராஜ)
கிடைத்ததுநமக்கு கிளிமொழியாளால்
கிருஷ்ணன் தெரிசனமேயுய்ய
படைத்ததுபிரமன் பக்குவமாக
பண்ணுந்திருமண மேசெய்யு (இராஜ)
இன்மையிற்பெண் களெவறினும்சிறந்த
எழில்மிகுநின் மகளினைக்கொண்டு
றம்மியமாக வந்தருளும்அந்த
ராமதாசன் தனைகண்டு—இராஜனே,

வசனம்.

இந்தவிதம்—சபையிலுள்ளயாவரும் ஸ்ரீகண்ணனுக்கே—ருக்குமணியை கொடுப்பதுநலமென்றுசொல்லுகிறதர்க்கிசைந்த வீஷ்மருஜனை உருக்குமளனென்னும் மூத்தகுமாரன் அப்படி இடையனுக்கு என்னுடையதங்கை ருக்குமணியம்மாளை கொடுக்கக்கூடாதென்றும் சிசுபாலனுக்கே கொடுப்பேனென்றும் பிதாவுடனும் ருஷிசு—தேசத்துராஜாக்களுடனும் வீரியம்கூறியது இதுயாவரும்—அரியவும்.

விருத்தம்.

இப்படியே ருக்குமனுமிகழ்ச்சியாக
யேசியேதிருமணத்தை தடுத்தசேதி
ஒப்பில்லாருக்குமணியும் கேள்விபட்டு
உடல்பதைக்கநாருசம் செவிபுகுந்து
கப்பியதுதான்போலகலங்கிநின்று
கருத்திசைந்தபாங்கியரை யழைத்ததற்கு
எப்படியும்கண்ணனையே சேரும்வாறுய்
ஏற்றுவீர்ஒருவிதத்தால் சாற்றுவீரே.

இராகம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

சகியேநீசொல்லடி—அந்தறங்க
சகியேநீசொல்லடி.

அநுபல்லவி.

சகியேநீயோதடி சந்தேகம்தீறயென்னை
அகிலலோகநாதன் அடைவாரோ-அடையாறோ (சகி)

சரணம்.

அண்ணனருக்மன் அரசனெதிரில்மானே
கண்ணனுக்குதற கருத்தில்லையென்கிறனே (சகி)
குட்டிகலகஞ்செய்து குண்டுணியாய்த்தானே
மட்டிசிசுபாலனுக்கு மணஞ்செய்யவென்றனே (சகி)
பச்சைவண்ணனென்னை பாருரோகிருபைபூற
இச்சையாய்வாருரோ இவடந்தனில்சேற (சகி)
ராமதாசனது நற்கருத்தரியாரோ
பக்ஷமாயென்னைகறம் பற்றவும்நேருரோ (சகி)

இவ்விதமாய் மனவருந்திய ருக்மணியம்மனை அப்பாங்கிகளில் லசனசாதுரியமென்னும்தோழி அம்மா கண்ணன்வந்து மணமுடிப்பார் மயங்காதேயென்று நீதிகூறியது.

விருத்தம்-பாசுரம்.

இன்னளவாயோதுபசுங்கிளியையொன்ற
எழில்மிருந்தருக்மணியும் வருந்துங்காலை
மன்னுதிருசடையந்த ஜானகிக்கு

வாஞ்சையோடும் மனந்தேறசெய்தவண்ணம்
தன்னிகரிலாதருகில் சற்வகாலம்
தயங்கிநின்றதோழியரி லொருத்திமுந்தி
துன்னியேதேற்றரவு பலவாருக ச்
சொல்லுவாள் சந்தேகம் கெல்லுவாளே.

இராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

வருவார் வருவார் கண்ணன்
வந்துன்னைமனஞ்செய்வார்
வருந்துவ தேனோ அம்மா வருவார்

அநுபல்லவி.

திருவாபரணமோடு திகழ்பீதாம்பறம்நன்னி
பறிவாகவேயுற்ற பாரினிதானென்றெண்ணி (வரு)

சரணம்.

துஷ்ட்டருக்குமண்பேச்சு சிரிதும்சேடேருமோ
தொல்லுலகிலவன் கலகங்கள்மீருமோ
மட்டில்லாபுகழ்கண்ணன் வல்லமைமாருமோ
மனஞ்செய்யவுனையிப்போ மாலுக்கொருபாரமோ (வரு)
வய்யமதிற்கொடிய சிசுபாலன்முதலோர்க்காதி
வல்முடியோர்க்குகண்ணன் வாளாகும்மாம்பேதி
பய்யவுலகிலெங்கும் தெரியாதோ இந்தசேதி
பயமேயுனக்குவீணில் பாரின்னம்யெட்டுதேதி (வரு)
வண்டுநிகர்த்தகரு விழிமாதாசேமன்று
மன்னவர்மகிழ்மனம் மருவியுன்றனையன்று
அண்டமதனையெடுத் துண்டகண்ணன்நின்று
அன்புடன் துவாரகை அழைத்துசேருவரென்று
வருவார்வருவார்கண்ணன் வந்துன்னை மனஞ்செய்வார்
பக்ஷமுடனேயந்த விண்ணவருங்கோற
பாவைதேவகியாதி பலருங்காணவேதீற
ராமதாசனும் றம்மியமாய்க்கூறி
நாடியுறைநிடம் நலமாகவேசேர வருவார் (வரு)

வசனம்.

இப்படி மனம் சந்தேகம்நீங்கிய தோழியைப்பார்த்து கண்ணனுக்குபோய் தன்மனக்குறையும் அரமனேயில்நடந்த விருத்தாந்தத்தையும் சொல்லும்படியாக தங்கள் அரமனேபுரோகிதர்களில் புத்திமிகுந்த வேதியரொருவரை அழைத்துவரும்படி ருக்மணிதேவியுரைத்தல்.

விருத்தம்-பாசுரம்.

ஆழிசூழுலகுதன்னில்—கிருஷ்ணமூர்த்தி
அன்புடனேமனஞ்செய்ய—வருமாறுகத்
தோழியிந்தவிதமுறைத்தசொல்லேக்கேட்டு
துயர்த்தருக்மணிச்சகியைநோக்கி
நாழியொருதடையன்றிவேதியரை இப்போ
நம்மிடத்தில்கொண்டுவரவேண்டுமென்று
வாழியென அன்றுரைக்கும்—வஞ்சிதன்னே
வருத்திஞள்-அழைத்துவர-திருத்திஞளே.

இராகம்-செஞ்சுருட்டி-அடதாளம்,

பல்லவி.

வேதியனேயழைத்துவாடி
வேகமாயோடி (வேதியனே).

அநுபல்லவி.

மேதினியில்யெந்தனுக்கு
மெல்லியுன்போலொருவ ல்லியில்லேயந்த (வேதி)

சரணம்.

தயவுசெய்தேன்மீது சற்று தய்யலேபோடி
நயமதாகவேயுறைத்து நாடியெங்கும்தேடி
சேடியிப்போதந்த (வேதி)
பேசிதாமதஞ்செய்யாதே பெண்ணேநீயோடி
காசினிலெவருமஞ்சும் காலன்சிசுபால
மாலன்வருவானந்த (வேதி)
கருதிருக்மணி அனேவரையும் கலகஞ்செய்கிறுன்
துரிதமாகசென்றுநீயும் சொல்லியங்கேபல்லி
துல்லியஞமந்த (வேதி)

தக்கவெகுமானம்உனக்கு தருகிறேன்நீயடி
மிக்காமதாசன்தன்னை வேண்டியுடன்தூண்டி
ஆண்டுசென்றேயந்த (வேதி)

வசனம்.

வேதியரை அழைத்துவரும்படி. ருக்மணிதேவி உத்திரவு படிக்கி தோழிமார்கள் வேதியரைவரும்படி சொல்லுதல்

விருத்தம்.

சோதிமிகு நவரெத்தினபணிகள்பூண்டு
சுந்தரியாம்ருக்மணிசெய்திட்டந்தன்னை
தீதில்லாசகிதனது சிரமேற்கொண்டு
தீவிரமாய்சென்றந்த வேதியர்க்கு
நீதியாய்தலைவணங்கி யஞ்சலியம்செய்து
நேறிளையாள் உம்மையளைத்திடவேசொன்ன
சேதிதன்னையானுரைக்க—வந்தேனென்று
செப்புவாள்மதிமுகத்தை-யொப்புவாளே.

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

அப்பாவேதியரே நீரும்எங்களம்மணி
அழைத்திடச்சொன்னாள் வாரும்.

அநுபல்லவி.

மெய்பாகஜெபதப ஓமங்கள்புரிந்திடும்
துப்பவேதங்கள்கலை துலங்கவேதெரிந்திடும் (அய்யா)

சரணம்.

சந்திரமுகியொன்று உமதிடத்தில்
சாற்றிடவேண்டுமென்று
யெந்தனையனுப்பினாள்—இட்டுவரச்சொல்லி
இப்போதுவாருவிடில் இதையஞ்சலிப்பாள்மெல்லி
சிக்கிறம் வருவீரே—அடியாள்சொல்லும்
சேதியைத்தெருவீரே
மாறக்கம்மதனைபார்த்து மனந்துயருற்றவஞ்சி
மாதென்னையனுப்பினாள் மறம்முறைக்ககெஞ்சி (அய்யா)

பங்கஜதளநயனி ருக்மணிமாது
பரிமளமவரசயனி
யெங்கள் துரைசானிக்கு இருக்கின்றதுமாலமனம்
இன்றதுமுடிந்திடில் எவர்க்குமதுவேகுணம் (அய்யா)

உண்டிலேயெனுமிடையாள் அற்புதமாக
உற்றஅன்னத்தின்நடையாள்
அன்றில்ராமதாசன் அருளால்கண்ணன்தன்னை
அன்புடன்இட்டுவர அனுப்புங்காரியமென்னை
அய்யாவேதியரே நீரும்யெங்களம்மணி
அழைத்திடச்சொன்னால்வாரும்.

வசனம்.

இவ்விதம்சொல்லிய தோழியரோடும் அதிவிரைவில்தனது நேம நிஷ்டை யெல்லாமுடித்துக்கொண்டு வேதியர் ருக்மணி இடத்துக்கு வருவது.

விருத்தம்-பாசுரம்.

அனுதினமும் நாயகியின்—ஏவலெல்லாம்
ஆவலுடனே செய்ய—அருகிருக்கும்
மினுமிடைநேற்தோழியிந்தச்சேதிசொல்ல
மேலானவேதியனும்—கேட்டுகந்து
மனுவலந்தவிதிப்படியே—நேமநிஷ்டை
பறபறப்பாய்செய்துடனே பூர்த்திசெய்து
மனுமுரையாம்—மனமிப்போமுடியுமென்றே
மருகுவார்மறையவரும்—வருகுவாரே.

இராகம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

வேதியர் வருகின்றாரே—துரிதமாக
வேதியர் வருகின்றாரே.

அநுபல்லவி.

வேதியர்வருகின்றார் மேன்மைமிகவும்பூண
மாதுருக்மணிதன்னை மகிழ்ச்சியுடனேகாண (வே)

சரணம்.

முகத்தில்நாமந்துலங்க மார்பில்வெள்ளை
முப்பூரிநூலிலங்க
மகுத்துவம்முலநல—மந்திரமோதிக்கொண்டு
வருகையில்திசுபசகுணவண்ணமும்கண்டு (வே)
காதில்குண்டலம்அசைய திருமணிக்
கழுத்தில்தாவடம்அசைய
கோதில்லாநவரெற்றின பவுத்திரம்விரலில்மின்ன
கூறுபட்டாடையிடைகூடியங்கேதுன்ன (வேதியர்)
கனமருமலர்முடித்துசந்தனம்பூசி
கையிற்புகளதாம்பூலம்பிடித்து
வினையமுடனேவந்து—மெல்லியரோடும்தொடர்ந்து
மேதினிமீதுவெகு விரைவாகவேநடந்து (வே)
அச்சுதன்அருள்பெற்றோன் சாத்திரமோடு
அருமறைகளும்கற்றோன்
மெச்சும்புகழ்படைத்த விப்பிரன்அன்புகண்டு
ராமதாசன்பேரில் நிறைபக்தியேகொண்டு
வேதியர்வருகின்றாரே—துரிதமாய்—வேதியர்

வசனம்.

வேதியர் வந்ததை தோழியோடு ருக்மணிக்குசொல்லுதல்.

விருத்தம்-பாசுரம்.

தேவிநீயுரைத்தவெல்லாம் தெளிவாகச்சென்றங்கோதி
தாவிவேதியர்க்குகாதில் தகுந்தவாரியற்றிநின்று
ஆவியாய்கண்ணன்றன்னை அருகுரும்விதமேயாக
வாவியும்வயல்சூழ்நாட்டில் வருவித்துவந்தேனம்மா.

இராகம்-செஞ்சுருட்டி-ஏகதாளம்.

பல்லவி.

விப்பிரர்வந்தாரம்மா—அம்மா
விப்பிரர்வந்தாரம்மா

சரணம்.

விப்பிரர்வந்தாரம்மா—மெல்லிநீகேளம்மா
வேதமங்கற்றோனம்மா அம்மா (விப்பிரர்)

பத்திரிகைகளிக்க—பறமணிடமளிக்க
சத்தியுள்ளோனம்மா அம்மா (விப்பிரர்)
துவாரகாபுரிசென்று—சுவாமிகுறைதின்று
துரிதம்வருவாரம்மா அம்மா (விப்பிரர்)
உன்கவலையோட்ட—உள்ளமகிழ்ச்சிகாட்ட
உடனேவந்தாரம்மா அம்மா (விப்பிரர்)
கோதைராமதாசன் நோக்க கோபாலன்தன்னைச்சேர்க்க
வேதியர்வந்தாரம்மா அம்மா வேதியர் வந்தாரம்மா
விப்பிரர் வந்தாரம்மா அம்மா விப்பிரர்வந்தாரம்மா.

விருத்தம்-பாசுரம்.

வந்தவேதியரைக்கண்டு மாதருக்மணிவணங்கி
இந்திரன்போலவெண்ணி இடவல்சாறிவந்து
சந்தமாய்ச்சொட்சோப சாறங்கள்மிகவேபண்ணி
விந்தையா யாசனத்தில் வீற்றிருந்திடுமென்றாளே.

வசனம்.

வந்தவேதியர் அழைத்தசேதி யென்னவென்று ருக்மணியை கேழ்க்குதல்.

விருத்தம்-பாசுரம்,

வீற்றிருந்திடுமென்றோதும் மெல்லிருக்குமணியையந்த
யேற்றவேதியருங்கண்டு இன்பமாயனுக்கிரகித்து
ஊற்றமாயெனையழைத்த உள்ளகாறியமேதென்ன
சாற்றுவாள்கண்ணன் பால்போயசங்கதியுறையும்
[என்றே.

வசனம்.

கண்ணபிரானைத் திருக்கல்யாணஞ்செய்துகொள்ளும்படி உருக்மணி ஓலையெழுதல்.

அகவல்.

பாற்புகழோங்கும் பரதகண்டத்தில்
நீர்வளமிகுந்த நெடுகடல்சூழ்ந்த
மன்னர்கள்பகுதி வளங்கிடும்செங்கோல்
துள்ளியசேனைகள் துலங்கியவந்த
திருவளர்சூழ் சேணமாபுரியில்

இருநிதிபடைத்த இளவரசென்னும்
சீர்வசுதேவர் செய்தவந்தனிலே
பூரணச்சந்திரன் போலவுதித்து
செழுமணிக்கிரீடம்சிறசினிலோங்க
வழுவில்லாகுண்டலம் வளைசெவியிலங்க
வச்சிரகேயூற் வலயங்கமின்ன
உச்சிதக்கவுத்துபமுறமதிற்றுன்ன
முத்துச்சரப்பணி மோகனமாலைகள்
ரெத்தினபதைக்கம் றவியெனவிளங்க
மட்டில்லா ஒளி நவமணிகள்குயின்ற
பட்டிடையுறைஞாண் புளபளவென்ன
இணையில்லாக்கங்கணம் மிருகறந்தொளிற
கணையாழிவிறலில் காந்திதுலங்க
தண்டைகள் தங்க ச்சதங்கையினூபுறம்
கண்டைகாலில் காந்திதுலங்க
கலகலவென்ன
மிக்கவே இடையில் வெய்யவன்கூசத்
தக்கபீதாம்பறம் தகதகவென்ன க்
கூடும்சங்காழி குணபதரேகை
நீடும்பதத்தில் நிகநிகவென்ன
புயவென்முதுகில் புதுமையாயுள்ள
உயர்மச்சரேகை யொளியதுசெய்ய க்
கஷ்தூரிமுகமும் கமலநேத்திரமும்
விஸ்தாரமார்பும் விரிமலருந்தியும்
திகழுபயஸ்தமும் திவ்வியபொற்பதமும்
புகழுடைமனதும் புண்ணகைவாயும்
மாதர்கள்மயங்கும் மன்மதவடிவும்
ஆதரவாக அலைகடல்மத்தியில்
துவாரகாபுரியோர் தொழுதடிபணியும்
அவாவெனும்வினையை யகற்றும்கோபாலா
மச்சகூறம் விராகமுதலாய்
உச்சிதமாமந்தச வுருவெடுத்தோனே
காதலாயானையை கார்த்திடும்மூலா
நீதமாய்நித்திய நின்றிடுஞ்சீலா

உலகெல்லாம்முன்னம் ஓறடியளந்த
இலங்கியகீர்த்தி இசைநெடும்பாதா
முச்சகம்புகழ் முன்பார்க்கடலில்
பச்சையாலிலைமேல் பள்ளிகொண்டவனே
மண்டலமதனில் வந்துமோகியாய்
அண்டருகப்போ அமுதளித்தோனே
தருணத்தில்வந்தருள் தாமோதரனே
பெருமணம்பொருளாம் பிரணவப்பொருளே
பருபறமற்றபத்தற்தங்களை. த்
தாமரைகையால் தளுவுருநாதா
பக்ஷமாய்முன்னம் பாரெழிரெண்டும்
குக்ஷியிற்கொண்ட கோலாகலனே
லக்ஷிமிதன்னை லாவன்னியமாக
வக்ஷத்தில்வைத்த வணமாலிஹரியே
வஞ்சினையாலுமை மாய்க்கநினைத்த க்
கஞ்சனைகொண்ட காம்பிரீயனே
நஞ்சுளயமுனு நதியிற்காளியனை
விஞ்சாதடக்கும் விமலபொற்பாதா
வறைதன்னையெடுத்து மாயவனந்தன்னில்
நிறைதன்னைகார்த்த நின்மலரூபா
பூதனைசெய்விஷம் புந்தியிற்கண்டு
வேதனைசெய்து விழமடித்தோனே
தாயசோதைக்குத்தறணியாவையுமே
வாய்ந்திற்காட்டிய மகிமையுள்ளோனே
அதிபாலியத்தில் ஆயற்பாடியிலே
எதுகுலம்ஓங்க எண்ணிவந்தோனே
இந்திரன்துதிக்கும் இணையடிகளிலே
சுந்திரமாக ச்சொல்லிவணங்கி
அடியாள்ருக்மணி அஞ்சலிசெய்து
படிபமாய்எழுதும் பாக்கியவிண்ணப்பம்
தேவரீரளித்த தெள்ளருளாலே
பூமியிலிதுவே பொருந்தியேக்ஷேமம்
இப்பொழுதுமக்கே யென்றனையளித்து
ஒப்பில்லாத்திருமணம் வுச்சவம்முடிக்க

வேண்டுமென்றெனதுமேலானதந்தை
ஈண்டுளமுயர்ச்சி யியற்றிங்காலே
அண்ணன்ருக்மணன் நகமதுக்கெடுதி
எண்ணியுமக்கே ஈயொண்ணுதென்று
சிசுபாலனுக்கு சீரமணம்முடிக்க
விசுவாசமாக விரும்பியுற்றோர்க்கும்
துற்போதனைகள் தோன்றியமட்டும்
கர்ப்பனையாக கழவதுமன்றி
இடையனென்றும்மை யேகதேசமதாய்
மடையனென்றோதி மன்னவர்சபையில்
இகழ்ச்சியேசெய்து இயம்பியேதல்லால்
மகிழ்ச்சியேகொண்டு மாற்றும்ஓதியதை
செம்பொன்னுதென்றன் சிறுவாயினலே
எப்படியுமுமக்கெழில்மாலேசூட்ட
ததிஇதுவென்று தஞ்சமாய் யானும்
மதிதனிலெண்ணி மதித்திடும்மதனல்
காசினிபோற்றும் கவரிசன்னதிக்கி
நேசியாய்சென்று நின்பொருட்டியாள்
பூசையன்போடும் புரிந்துமீளுங்கால்
ஆசையாய்வந்து அவ்வழிமருத்து
என்றனையுமது இரதத்திலேற்றி
நன்றனதுவாரகா நகரத்தில்சேர்ந்து
கடிமணக்கொள்ள காதளால்கோரும்
யடியளாமென்னை யாட்கொள்ளுவீரே

தத்துவம் 96 தொண்ணுத்தாறும் அறிந்த ருக்மணி முகூர்த்த திருமண
அகவல் முற்றிற்று.

வசனம்.

ருக்மணியம்மன் இன்னமும் வாய்மொழியாய் ஸ்ரீகண்ணபிரானுக்கு சொல்லும்படியுரைத்தல்

விருத்தம்.

இன்னலமாய் யுருக்குமணியுமின்பமாக
எழுதியதின் மனதிலுள்ள சேதியெல்லாம்

மன்னியதோர் திருமணஞ்சேர் ஓலைதன்னை
மார்க்கமுள்ளவேதியன் தன் கையில்தந்து
பொன்னணியும் மயலினையார் மாடஞ்சூழ்ந்த
புதுநகரந்துவாரகையில்வாழுகின்ற
தன்னைநிகற்ற கண்ணன் தனக்குமுற்றும்
தாவென்றாள் இதைசொல்லி வாவென்றாளே.

இராகம்-யமுனாகல்யாணி அடதாளம்.

பல்லவி.

சொல்லுமய்யாவேதியரே துவாரகாநாதனுடனே
சொல்லுமய்யாவேதியரே

அநுபல்லவி.

அல்லும்பகலும் உம்மையேயென்று
அலைகிறாளந்த ருக்மணியென்று (சொல்லு)

சரணம்.

அசூரக்குமாலைசூட்ட
அஞ்சாதே யென்றன்னெஞ்சம்
வசுதேவர்புத்திரர்க்கிதை
மற்மம் மாகவேகொஞ்சம் (சொல்லு)
உருக்குமனுடைய வசனங்கேட்டு
உள்ளம் பதைத்திடவும்நொந்து
இருக்கிறாளென்று கண்ணனுக்கு
ஏற்றபடியே வியர்ந்து (சொல்லு)
பொட்டணவே யுமைவிவாஹம்
புரிந்திடுதல் நன்மையென்று
இஷ்டமுடன் முற்றும்நம்பி
இருக்கிறாளந்த ஏந்திழையென்று (சொல்லு)
அன்புடைய ராமதாசன்யேற்றும்
அச்சுதனும்கிருபைபண்ணி
இன்பமாக வழைத்துச்செல்ல
எழுந்தருளும்படியெண்ணி (சொல்லும்)

வசனம்.

வேதியர் கண்ணனிடத்துக்குப்போவது

விருத்தம்.

இவ்விதமாய்ருக்மணியின் மதுரச்சொல்லும்
ஏற்றநற்றறிருமுகமும் கையிற்கொண்டு
செவ்வியநாம் வேதியனும் சிறமேற்ருங்கிச்
சேயிளையின் சம்மதத்தோடெழுந்திருந்து
எவ்வகையும் திருக்கண்ணன் றனையளித்து
இந்தவிடம்வந்திடுவே னென்றுமேலும்
அவ்விதமாய்பகவானை தரிசிப்பேனென்ன
ஆடினார்பத்தியுடன் ஓடினாரே

இராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

பாக்கியம் என்னசெய்தேனோ பகவானைகாண
பலித்ததேயென் அதிர்ஷ்ட்டம்

அநுபல்லவி.

திலாக்கியமுடைய சத்காரியம்புரிந்தேனோ
சன்னதிகள்தோரும் சேவித்திருந்தேனோ

சரணம்.

சாதுக்களுடன்கூடி சதாகாலம்
சம்பாஷித்தேனோ நாடி
யாதவங்கள்செய்து மானிலத்துய்தேனோ
மாமறையோருக்கு ஊழியஞ்செய்தேனோ, (பா)
ஆலயங்கள்கட்டி அன்புவியில்
ஆழுங்குளங்கள் வெட்டி
சீலநேமநிஷ்ட்டைசெய்து நானுகந்தேனோ
சேதுமுதல்திவ்ய தேசம்போய்வந்தேனோ (பா)
எக்கியாதிகிருதுக்கள்செய்து அரிபதத்தில்
ஏற்றமலர்கள்பெய்து
பக்குவமாகநான் பிரார்த்தித்துத்தணிந்தேனோ
பாகவதர்தம்மை பக்தியாகபணிந்தேனோ (பா)
ராமதாசன்றன்னை சேற்வைசெய்ய
நான்செய்தபூசைமுன்னை
பக்ஷமுன்நின்று பண்ணுநல்வினைகண்டு

பாவைருக்மணியருள் பணியையான்மேற்கொண்டு
பாக்கியம்யென்னசெய்தேனே பகவானேகாண (பழி)

வசனம்.

இவ்வாறாக துதித்துசொல்லும் வேதியர் துவாறகையென்னும் திருநகரந்தம்மை அதில்அமைந்தகோபுறம்தம்மையும் உன்னதமான மாடமாளிகையும் அதனதன் அலங்காரங்களையும்கண்டு ஆனந்தப்படு வதை சொல்லுதல்.

விருத்தம்.

பாரிலிந்த விதமாக ப்பஜனைசெய்து
பரிந்தோரும் வேதியன் தன்விழிக்குநேரில்
சீற்மருந்தேவர்முதல் மக்கள்யாரும்
சேவிக்கதேடிவரும் சிறப்பமைந்த
ஊரெனவே நூதனமாய் க்கடலுக்குள்ளே
உண்டானதுவாரகையாம் நகரந்தன்னில்
காற்முகிலுந்தவழுந்திருக்கோபுரத்தை க்
கண்டிட்டார் அதிசியமாய்விண்டிட்டாரே.

இராகம்-ராதாமக்கிரிகை-அடதாளம்.

பல்லவி.

கண்டார்வேதியரும் துவாரகாபுரியை க்
கண்டார்வேதியரும்

அநுபல்லவி

அண்டத்தவர்களென்றும் அன்பாகவேதொண்டு
அர்ப்புதமாகசெய்து ஆசைபுரியப்பண்டு
புண்டரீகக்கண்ணன் புண்ணியஸ்தலத்தைக்கண்டு
புதுமையாகவுள்ளம் பூறித்தஞ்சலிகொண்டு

சரணம்,

மேருமலைநிகர்த்த விந்தைகோபுரங்களும்
மின்னும் பலமணிகள் மேவியமதில்களும்
காருலவியபெருங்கடல்சூழ் அகழ்களும்
காதல்மருவும்கோட்டைக் கனஞ்செல்கொடிகளும்
கண்டவர்மகிழும் பிரகாரமும் விண்டலம்புகளும்
நவசித்திர

விளங்கும்மண்டபங்களும் துலங்கும்துயஸ்தம்பமும்
இலங்கும்விமானங்களும் தலங்கொள் ஆலயங்களும் (கண்)
தாமரைபொய்கையும் தழைத்திடும்புன்னையும்
தக்கவசோகம் தாறமத்தருக்களும்
பூமணமாமலர் பூசுஞ்சந்தனமகில்
பொருந்தியசோலைகளும் புகளுநற்சாலையும்
பூங்கிளிகொஞ்சும் விநோதமும் மாங்குயில்
விஞ்சும் அற்புதங்களும்
மருவும்மல்லிகைமுல்லை பொருவில்சுகந்தமோடும்
திருவின்சென்புகத்தோடும் அருங்குசமங்களாதி
கண்டார்வேதியரும் துவாரகாபுரியை (கண்)

சங்கமிருதங்கம் தாளம்பூறிபேரி
சார்ந்திடும்மெக்காலை சகலவாத்தியங்களும்
துங்கதூபமும் தூபநைவேத்தியமும்
துடந்தசாமரைசத்திர சோட்சோபசாரம்
சுகமாகுநிதமும் வைபவங்கள் அகிலமுந்திகழும்
விந்தைகளும்
அரம்பையரும்இணையிற் நிறம்பியமாதர்கள்
தரும்பாதம்நாட்டிய அறங்கத்தினழகையும் (கண்)

அருமறைமுளங்கிடும் அந்தணர்வீதியும்
அரநெறிவழுவாத அரசர்தம்வீதியும்
வரும்பொருள்வைசியர் வாழ்ந்திடும்வீதியும்
மற்றும்நகரஜனம் மருவும்நல்வீதியும்
வண்ணமாடங்கள் ஆபறணங்கள் எண்ணிகூடங்கள்
நிறைந்திடும்
யேற்றகடநடுவில் தோற்றும்தீபமதை
சாற்றும்மெல்லியும்பொருட் றேற்றமாய்சென்று (கண்)

அன்னைருக்மணிசொற்கள் அரியவேதமென்று
ஆனந்தமாகவே அகமதிலேயன்று
முன்னையநல்வினை முதுபயனுமென்று
முற்றுங்களிப்புடனே பெற்றமெலிகிதம்கொண்டு
முப்புரிநூலன் சாஷ்திரம்கற்ற ஒப்பருசீலன்
எப்பொழுதும்

ஒன்மையில்ருக்மணி உண்மைகருத்தின்படி
திண்மையுடையகண்ணன் வண்ணாநிகரைநின்று (கண்)
இந்திரபுரியொடு எழிமலரோன்புரி
இலங்குதனதன்புரி ஈசன்மருங்கிரி
அந்தமதிலிவைகள் அனைத்துமினையில்லாது
அமைந்துவிளங்குகின்ற அழகியதுவாறகை
ஆயர்தங்கோனை அருளுடைய தூயசீமானை
அழைத்துவர
சொல்லும்கன்னிகையோடும் அல்லும்பகலும்
ராமதாசன்சொன்னாரென்று அவரும்ஓடி (கண்டார்)

வசனம்.

இந்தவிதம் துதித்துக்கொண்டுவந்த வேதியரைக்கண்ட கண்ணன் சோட்சோபசாரம்செய்து தகுந்தஆசனத்திலிருத்தி வந்தகாரியம் யென்னவென்றுகேள்க்குதல்

விருத்தம்.

வேதியனும்துவாரகையின் விந்தையெல்லாம்
விருப்பமொடுகண்டவுடன் மெய்மறந்து
ஆதியாங்கண்ணனை நற்சேர்வைசெய்து
ஆனந்தவாரியிலே யாடிநிற்கும்
நீதிமிகும்விண்ணவர்கோன் மறையோனுக்கு
நேமமாய்வந்தனமும் புரிந்தீங்கின்று
சேதிநீவந்தவிதம் சொல்கவென்னச்
செப்புவான்காற்மேக மொப்புவானே.

கண்ணி.

இராகம்—புன்னாகவராளி—ஆதிதாளம்.

அர்க்கியபாத்தியங்கள்கொடுத்து
அதிதியைமிகவடுத்து
அர்ப்புதஆசனம்அளித்தார் அனந்தநாமன்
பொற்புறுமனதிற்களித்தார் ,, ,, ,, ,, ,,
வந்தவிப்பிறரைமதித்து
மஞ்சனம்விட்டுகீழ்குதித்து
வண்ணமாய்வந்தனம்புரிந்தார்மாதவன்தானும்
எண்ணியேபுத்தியிற்றெரிந்தார்.

ஷட்ரசஅன்னம்மிருந்து
சகலகணிவர்க்கந்தந்து
சந்தனம்தாம்பூலம்நீட்டினார் சாமளவண்ணன்
கந்தமலர்மாலைசூட்டினார்.
அத்தர்பந்நீர்தெளித்து
ஆனந்தக்கடல்குழித்து
அந்தரங்கமாகவளைத்தார் அச்சுதநாமன்
தந்தரமதனை யிழைத்தார்.
சப்பிரமஞ்சம் மீதிருத்தி
சரிமரியாதைபொருத்தி
சங்கதியைசொல்லுமென்றார் சாற்றவபௌமன்
இங்கிதமாய்யெதிரில்நின்றார்
எந்தநாட்டிலேயிருந்து
எவர் அனுப்பினார்தெரிந்து
என்னதானுமதுபேரும்—வேதியரே
பன்னுவீர் அதனைநீரும்.
இத்தனைதூரம்நடந்து
இருள்வனந்தனைக்கடந்து
எப்படிவந்தீரோசொல்லும்—மாதவரேநீர்
ஒப்பறுமுன்கவலைவெல்லும்.
எந்தவேந்தன் உமதுசொந்தம்
என்றுராமதாசணந்தம்
இசையவேதான்கேட்டருளினார்—மறையவனதனை
நசையமெய்ஞ்ஞானத்தருளினார்.

வசனம்.

இதைகேட்டவேதியர் தான் வந்தகாரியத்தைசொல்[illegible]க்மணி எழுதிய திருமுகத்தை கண்ணபிரான் திருகரத்திடுதல்.

விருத்தம்.

இப்படியே கண்ணபிரான் கேட்டதற்கு
எழிலுள்ளமறையவனும் மினுமையாக
மையபடியும்கண்ணாளும் ருக்மணிவிரும்பி
வறைந்தளித்த இந்தலிகிதமும்பால்
ஒப்பவேகொடுத்தங்கு நடந்தசூதை
ஒன்றுமேயொளியாமல் செவியிலிட்டு

செப்பமாயழைத்துவரச் சொன்னாள்சேதி
தெறிகுவீர்கிருபையொடு வருகுவீரே.

இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

கண்ணனே மணி வண்ணனே ருக்மணிமாதை
கடைக்கண் பார்த்தருளும் அண்ணலே

அநுபல்லவி.

கண்ணுவுனதரிப கலியாணகுணங்கள்தம்மை
வண்ணுமனதிலெண்ணி வஞ்சியிஷ்டமானாளும்மை.

சரணம்.

சம்பத்துடனேநீளும் சாறவபௌமனேநீளும்
சந்தோசமாகவன்று சாற்றும்முறமையாளும்
இன்பத்துடனேகூடி இருக்குருக்மணிநாளும்
இனங்கியுமைவருந்தி இட்டுவறசொன்னாள்கேளும் (க)
சிங்கத்துக்காக ராமன்செப்பிய...கண்டு
சென்றுகூளிமூக்கிற்குத்தி தூக்கியேகொண்டு
பொங்குவதுபோலவென்னை பொல்லாதகுணங்களுண்டு
பூமிதனில்சிசுபாலன் புலவனென்றுனேயிண்டு (க)
ஞானமொழிபூர்வத்தில் நான்முகநுரைத்துதந்த
நாறணனேநடமிடு வேதமுகந்திடமிந்த
மானிலத்தில்நோற்றநோம்பு சததியமேதாகிவந்த
மாதவனெனக்குபதியாய்வருவானெனக்குசொந்த (௩)
பக்ஷவாகணனைவிட்டு பாமாறைத்தோடேனென்றாள்
பாரில்பலஜென்மமெடுத்தாலும்மைவிடேனென்றாள்
ராமதாசன்நன்றி நேசியேன்மற்றேரையென்றாள்
நீடுலகில்மணமாலை நீசருக்கிடேனென்றாள்.
கண்ணனே மணி வண்ணனே ருக்மணிமாதை
கடைக்கண்பார்த்தருளும் (அண்ணலே

விருத்தம்.

கண்ணனே அடியேன் சொல்லுரைக்கிறங்கி
கலகம்செய்திடுவாருய் மாதினண்ணன்

85842

என்னறியசதுறங்கள் சேனையுள்ள
இசைவில்லாசிசுபாலன் தனக்கேமாலைத்
தின்னமுடனிடச்செய்வானென்னக்கேட்டுத்
தியங்கியேருக்மணியுமெந்தன்னேடும்
வண்ணமுடன்நீர்வந்தால் உயிர்தரித்து
வாழ்வேனென்ருள் அல்லதுதாழமென்ருளே.

இராகம்-கல்யாணி-அடதாளம்.

பல்லவி.

கண்ணுநீர்வரவேண்டும் ருக்மணிமாதின்
கருத்தைமுடிக்கவேண்டும்.

அநுபல்லவி.

கண்ணுநீர்வரவேண்டும் கவலையதனைகொய்ய
வண்ணமாய்த்திருச்செல்வி வாழமணமும்செய்ய

சரணம்.

எங்கிருப்பாளோவென்று ராஜக்கிரகத்தில்
எப்படிச்செல்வேனென்று
செங்கமாலேமனதில் சிந்திக்காமலேவந்து
சீக்கிறம்சேரச்சொன்னுள் சேயிளைதானும்வந்து (க)
வாசக்கர்ப்போரைக்கொண்டு விவாகஞ்செய்ய
வகைதேடவேண்டாமென்று
ஆசைக்கண்ணனுமுள்ளம் அன்புற்றிருந்தார்கெஞ்சி
அழைத்துவரவேசொன்னுள் அபறஞ்சிபோன்றவஞ்சி. (க)
திருமணம்முதநாள்சென்று கௌரிபூசை
திருப்தியாய்புரிந்தன்று
வரும்வழிதனிலென்னை வந்துடன்ரதமேற்றி
பெருமையாய்ச்செல்கவென்ருள் பேதைநின்பதம்போற்றி
கண்ணுநீர் வரவேணும்
பக்ஷமுடன்மணந்து விதிப்படியே
பாரில்ச்சிறப்பமைய்ந்து
ராமதாசனேடுதிரு நாரணனுபெருக்க
நாடிவாழ்ந்திடல்போல் நலமாசுகித்திருக்க
கண்ணுநீர் வரவேண்டும்ருக்மணியாதின்
கருத்தைமுடிக்கவேண்டும்.

ருக்மணி கலியாணம்.

வசனம்.

இவ்விதம் ருக்மணியுரைத்ததெல்லாம் சொன்னபடி யொன்று மொழியாமற் சொன்னவேதியரை ஸ்ரீகண்ணபிரான் பார்த்து அவருக்கு வேண்டியபடி வெகுமானம் செய்து நீ பின் நித்திய சூரியரூயெப்பொழுதும் யென்னுடைய பார்வையில் இருக்கக்கடவாயென்றுரைத்து ருக்குமணிக்கு இதோ உன்னுடைய இஷ்டப்படிக்கி நான் வந்து விவாகம்புரிந்து மங்களமாய் வாழ்ந்திருக்கலாமென்று சொல்லுமய்யா வேதியரே யென்று கண்ணன்கூறியது.

விருத்தம்.

வண்டுசேர்கூந்தலால் கருத்தை யெல்லாம்
வருமரையோன்வாயாற் சொல்லக்கேட்டு
பண்டுசெய்த புண்ணியத்தால் மாதிநிஷ்டம்
பலிக்குமெனவேதியரை ப்பரிந்துநோக்கி
அண்டுமந்தஅசடர்களை அழித்துநானும்
அழகியருக்மணிதனக்கு மாலைசூட்டக்
கொண்டுவரல்திண்ணம்போ யுரையுமென்னக்
கூறினார்கண்ணனுடன் விறினானே.

இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

வருகிரேனய்யா மங்கையைமணம்புரிய
வருகிரேன் மெய்யா

அநுபல்லவி.

வருகிரேன்மெய்யாநான் வம்பர்தங்களைப்போக்க
தருகிரேநாணந்தம் தய்யல்வளைகார்க்க
வருகிரேனய்யா

சரணம்,

வேதியரே நீரும் விரும்பிவந்தீரேமுன்னே
யாதொருதடையன்றி யானுமுமதுபின்னே
நீதியாய்பெரியோர்கள் நேர்ந்துமகிழ்ச்சிகூற
வாதியாய்நானங்கு வஞ்சிகோறிக்கைதேற (வரு)

துஷ்ட்டன்சிசுபாலன்மெத்த துள்ளிவிழுகிறானென்று
மட்டில்லாகேள்வியுற்றேன் மற்மத்தைபோக்கவின்று

ருக்மணி கலியாணம்.

கெட்டசருகெல்லாம் கெடுமக்கினிக்குமுன்னில்
பட்டபகலிலே பாழாக்கிரேன் பாரதன்னில் (வரு)
மதிமுகமங்கைக்கு மனதிலானந்தங்கூட
சதியதுசெய்யுமந்த சத்துருக்கள்பயந்தோட
அதிதுரையாகவந்து அனைகளெல்லாங்கடந்து
துதிராமதாசன்தன்னை தூக்கிறேன்நடந்து (வரு)

வசனம்.

கண்ணன் வேதியரோடும் சொன்னபடி பிரயாண பட்டுக் குண்டினபுரம் போகவெண்ணிசசாரதிக்கு ரதத்தை அலங்கரித்துகொண்டு வரும்படி திட்டம்செய்தல்.

விருத்தம்.

தாரணியில் வேதியனுக்குறைத்தவாறுய்த்
தன்னுடைய மனம்படியே செலுத்தவல்ல ச்
சாரதியைவருகழைத்து ச்சமயமின்று
சாற்றிடவே இணையில்லா த்தேரைக்கொண்டு
ஊர் திரும்படிக்குண்டினபுறமேயேக
ஓட்டிவரவேண்டுமென ச்சொன்னபோது
நேற்திகமான பரிதம்மைப்பூட்ட
நேறந்திட்டான் அலங்கரிக்க ச்சேர்ந்திட்டானே.

இராகம்-தன்னியாசி-அடதாளம்.

பல்லவி.

தேர் அலங்கரித்தான் சாரதி
தேர் அலங்கரித்தான்

அநுபல்லவி.

தேர் அலங்கரித்தான் தேவருமகிழ
தேற்ந்தவர்கண்டதை த்திவ்யமாய்புகழ (தேர்)

சரணம்.

பத்தரைமாத்து தங்கவொளியைவெல்லு
பச்சைமுதற் பற்பலமணிகளொல்லும்
உத்தமமாமலர் மாலைகள்புல்லும்
யோசனைதூரம் ஒருகோடியிற்செல்லும் (தேர்)
சித்தறித்தவச்சிர ச்சிம்மங்களைமாட்டி
சிங்காரமாகதலிங்கரும்புங்கூட்டி

உத்கல்முத்துக்குடைக்கொடிகள்நாட்டி
ஓடும்புறவின்ஒய்யார்மாய்ப்பூட்டி (தேர்)
உச்சிதசித்திர ப்படங்களுமன்ன
உன்னுததங்க க்கலசங்கள்மின்ன
விசித்திரப்பட்டு ச்சீலைகளுந்துன்ன
வெண்கலமணி கலகலவென்ன (தேர்)
அண்டர்களுடன் அருமுனிவர்நல்ல
ஆசீர்களுங்கூறி ஆனந்தமாய்வல்ல
யெண்டிசையும்நிரை இடறுகளைவெல்ல
ராமதாசனும்இன்பமுடன்சொல்ல (தேர்)

வசனம்.

இவ்விதமாய் அலங்கரித்து கொணர்ந்த சாரதியின்பேரில் கண்ணனும் வந்தவேதியருமாயெழுந்தருளி செல்லாநிற்கையில் இங்கே ருக்மணியின் திருமணத்துக்காக குண்டினபுறத்தைப் பீஷ்மராஜன் அலங்காறஞ் செய்வதைப்பற்றி சொல்லுதல்.

விருத்தம்.

இப்படியேகொண்டுவந்ததேறின்மீதில்
இங்கிதமாய் வேதியரும் கண்ணன்றனும்
ஒப்புரவேயேறிவந்தவூறைவிட்டு
ஒண்டொடியைக்காணவெகுதீவரத்தில்
கொப்பனவேகுண்டினபுரத்தருகேசேர
கோமகளும் பீஷ்மன் சிசுபாலனுக்குச்
செப்பமுள்ள திருமணமே செய்யுமாறு
சீறிட்டான் அலங்கரிக்கநேரிட்டானே.

இராகம்-பியாகடை-ஆதிதாளம்.

பல்லவி.

குண்டினபுரம் அலங்காரங்கள்செய்தார்கோலாகலமாக

அநுபல்லவி.

அண்டரும்மகிழ்ந்திட வரும்பொருள்சிலவிட்டு
மண்டலத்தில்ருக்மணி வரமணத்தின்பொருட்டு (கு)

சரணம்.

விந்தைவிந்தையாய் மேகமண்டலமுட்ட
விளைபசும்பந்தலிட்டு

சுந்திரமகரத்தோறணமிலங்கிட
சுற்றிலும்தொங்கவிட்டு
தொந்தமாகவென்னில்வேணச்சீலைகள்
தூக்கியேமேற்கட்டி
அந்தமிகுந்தறச குண்டொடுஜாலற்கள்
அணி அணியாகஒட்டி
பச்சையாய்கன்னல்கமுகின்வாழை
பக்குவமாகநாட்டி
மெச்சிடும் ஜோதிப் பளிங்குவிளக்குகள்
மேன்மைபொருந்தமாட்டி (குண)

உச்சிதகண்ணாடி சித்திரபடங்கள்
ஒளிதறவெங்குங்கூட்டி
கச்சிதப்பூமலர் மாலைசரங்களும்
காட்டியப்புறம்நீட்டி
சோதிபொருந்திய த்திருமணப்படிகள்
சுபகறமாய்பொருந்தி
கோதில்லாநவமணிகளிலங்கே
கோலங்களும்திருத்தி
ஆதிமுறைப்படி அறசாணிக்காலும்
அங்கமாகநிருத்தி
தீதில்லாறத்தின கம்பளமெங்கும்
தெரியவிரித்துஇருத்தி (குண்டி)

திருவளர் ராமதாசன்கோரியநகரினிற்
திறட்சியாய்த்தணமெருத்து
பருமணிகிரீடங்கள் தறித்திடும்மன்னனுக்கு
பட்டோலைகள்விடுத்து
ஒருமையானவேதியர்கள்புரோகிதர்கள்
ஒழுங்காகவறவடுத்து
பெருமையாகவேபதினென்வாத்தியம்
பேறிகைகளும்தொடுத்து (குண்டி)

வசனம்.

ருக்மணியின் மணகோலத்தைபற்றி சொல்வது.

விருத்தம்.

அருந்தந்தை மாதறசின் பீஷ்மராஜன்
அந்தணர்கள் அனைவரையும் வரவழைத்து
திருந்துமுக ருக்மணியின் சாந்திநன்மை
தீவரமாய்புரிந்து நற்றுணையீந்து
மருந்தெனவந்துற்ற மை விழியாரன்று
மங்களாசாசனமுஞ்செய்துநின்று
பொருந்துமணகோலமுடன்நடத்தவெண்ணி
பொங்கினார் மணங்கொண்டு தங்கினாரே.

இராகம் பந்துவராளி யேகதாளம்.

பல்லவி.

கல்லியாணக்கோலஞ்செய்தார்
கன்னியர்தாவ க்கதம்பங்கள்தூவ
நன்னிலைதேவ நாயகிமேவ
கல்லியாணக்கோலஞ்செய்தாற்
கன்னிகை ருக்மணிக்கு
நல்லதினம் மனைமீதில் நங்கையையுட்காரவைத்தார்
சோபனமே.

நங்கையுட்காரவைத்து
நன்மொழிநேசி நறுமலர்வாசி
மஞ்சளுநம்பூசி மங்களம்பேசி
நங்கையையுட்காரவைத்து
நலமுடனே மிகப்பாடி
மஞ்சனசந்தனதைலம் மயிலுடனேசிறசிலிட்டார்
சோபனமே.

மயில்வுடனேசிரசிலிட்டு
மங்கையரன்று வர்ணித்துநின்று
அங்கலையொன்று அரிதேவியென்று
மகிழவுடனேசிறசிலிட்டு
மாதுருக்மணிக்குமணம்
வகையுடனேவல்லியர்கள் மஞ்சணீருட்டிவைத்தார்
சோபனமே சோபனமே சோபனமே

மஞ்சனநீராட்டிவைத்து
வஞ்சியுமிலங்க மாகனந்துலங்க
நெஞ்சினில்மலங்க நேறிளைவிளங்க
மஞ்சள்நீருட்டிவைத்து
மாதிணங்கம் கலைந்துவட்டி
மிஞ்சவேகஸ்தூரிபொட்டு மினுக்கிடவே சடைபின்
னர் சோபனமே.

மினுக்கிடவேஜடைப்பின்னி
விந்தைசெய்பணிகள் வேண்டிய அணிகள்
சுந்திரமணிகள் சொகுசுறுந்துணிகள்
மினுக்கிடவேசடைப்பின்னி
விரைகம்மள்ப்பூமலர்முடித்து
கலங்கமில்ஜவ்வாதணிந்து கணகஒட்டியாணமிட்டார்
(சோப)

கனகஒட்டியானமிட்டு
கண்ணனுக்கென்று காறிகையன்று
வண்ணமுதென்று வகையினையொன்று
கணகவொட்டியாணம்இட்டு
கருதிரநுங்குகள் திட்டி
பணிமலரணி மெல்லியர்கள் பாடியாலாத்தி யெடுத்
தார் (சோ)

பாடியாருத்தியெடுத்து
பாவையர்மகிழ்ந்து பாடியேபுகழ்ந்து
சேர்வையுகந்து சீர்களும்நிகழ்ந்து
பாடியாருதியெடுத்து
பாங்குகள்வாய்த்திடவென்று
கூடியெல்லோர்களுமதித்து கொம்பனையாளை துதி
த்தார் (சோ)

கொம்பனையாளைத்துதித்து
கூடவேகலந்து கும்பனுமலர்ந்து
நாடவேநினைந்து நன்மையைநினைந்து
கொம்பனையாளைத்துதித்து

கோலராமதாசன்பின்று
கொண்டு திருமணஞ்செய்ய கோபாலன்வருவாரென்
றார். சோபனமே சோபனமே

வசனம்.

சிசுபாலன் மணகோலம்கொண்டது.

விருத்தம்.

குண்டலிபுரத்தரசன் பீஷ்மராஜன்
கோதைமனக்கோலமுடன் அலங்கரித்து
மண்டலத்து அரசர்களும் சிசுபாலனன்று
மதித்தபடிவருவனென்று நோக்கிநிற்க
பண்டபவழக்கம்போலவனுக்குள்ள
பணிமணிகள் சிறுகப்பூட்டிச்சேமங்
கொண்டிடவேகலியாணக்கோலஞ்செய்ய
கூடினற்சுகமாக படினரே.

இராகம்-மத்தியாமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

மனக்கோலம் மதுகொண்டான்
மகசேதிநாடன்
அணைவே ருக்மணியையென்
நறைந்தான் மதிகேடன்

நாடியே அலங்கார
நழுங்குகள்நிகழ
மாடிமேல்விளங்கினன்
மங்கையர்மகிழ
சந்தன தயிலம்
சவ்வாதுடன்கூட்டி
அந்தமாய்ப்பூசினன்
ஆசையாய்க்கிட்டி
மங்களகரமாக
மஞ்சணம்மாட்டி
தங்கவஸ்திரங்களும்
தரித்தார்பணிபூட்டி

முல்லைமல்லிகைமலர்
முடித்தார்கள்வியந்து
யெல்லையிற்பெண்ணும்
கேற்றநன்றார் நயர்ந்து

தோரண பாகூயம்
துலங்கவேகட்டி
பாருளும்வேந்தனை
பாடினார்காட்டி

யாத்திராதாணங்கள்
யாவையும்புரிந்து
சாஸ்திரவிதங்களை
சாத்தினார் தெரிந்து

ராமதாசன்செயல்
தெரியாமல் ஆடி
க்ச்சியாய்ப்புறப்பட்டான்
கலியாணந்தேடி.

வசனம்.

இவ்வாறு மணகோலங்கொண்டுவருகிற சிசுபாலன் இடைவழியி ல் அவசகுனம் கண்டதை சொல்லுதல்.

விருத்தம்.

கோலமுடனிவ்வாறு சிசுபாலநன்று
குதுகலமாய் மாலையிடமனதில்யெண்ணி
ஞானமதில்பதிநென்வாத்தியமொழிக்க
நாற்புறமும் சதுறங்கசேனைசூழ
சீலமுடருக்மணிவாழ் நாட்டைகிட்டி
சேறுமுன்னந்தனதுஇடத்தோள் துடிக்க
ஆலமென இடைவழியிற்யெதிருநேறில்
அடைந்திட்டான் சகுணத்தா லுடைந்திட்டானே.

இராகம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

வருகிறான் சிசுபாலன் அவசகுணத்தால்
வருகிறான் சிசுபாலன்.

அநுபல்லவி.

வருகிறான்சிசுபாலன் மாதரசியைநாடி
அருகில் அசுரர்சூழ அதி துஷையாகவோடி (வரு)

சரணம்.

ஜராசந்தன் முதலோரை சேர்ந்து அனுப்பிவிட்டும்
கரத்தில் பளபளென்ன கடங்கட்டாறிதொட்டும்
தருதவங்கண்டவர்கள் தயங்கும்படியாநட்டும்
தன்மனம்வெண்ணத்தை தாவிமுடிக்கும் மட்டும்
இப்படியாகவிச்சை இழுக்கவூறைக்கடந்து
பேருழிவற்கெதிரில் இரண்டுநாகம்நடந்து
செப்பியபடியோடி சென்னல்அவையடைந்து
சிறும்புறவிகண்ணீர் சலவடியவுடைந்து
சத்திரபட்டதுவஜங்கள் சாமரங்கள்முறிய
சாக்ஷமாகவே சகலபக்ஷியிறைய
அத்திர்விருக்ஷம்போல் அன்றுமழைவிறிய
யானையும்கல்லைவாரி ஆனைமட்டும்வெறிய (வரு)
பூமிகிடுகிடென்றப் போதுடனேநடுக்க
காமியான அசுரற் காலங்களும் ஒடுங்க
சாமிபணபடியே சகலமுங்கூடிப்போங்க
சங்கட்டம்கண்டுமனஞ்சலிக்காமலேயோங்க (வரு)

வசனம்.

கண்ணன்ருக்மணியை மாலையிடும்படி பீஷ்மநகரம்சென்றுரென்றும் சேதியறிந்த பலராமன் தன் தம்பிக்கு உதவியாக புரப்பட்டு வருவதை சொல்வது.

விருத்தம்.

சிசுபாலன் இவ்விதமாய் சகுனம்கண்டு
செல்விதேவகிபுதல்வனெதிர்த்திட்டாலும்
அசுவமுதல் சதுறங்கசேனைசூழ
அவனையுமேஜெய்த்திடலாமெனவே தெய்வப்
பசுவானருக்மணியை மாலைசூட்டப்
பயமற்றுமனதிலெண்ணி நடக்குங்காலை
விசுவாசசனங்களோடும் கண்ண னண்ணன்
வேண்டினார் உதவிவரத்தூண்டினாரே

இராகம்-காபி-சாபுதாளம்.

பல்லவி.

பலராமன்வருகிறார்
பரிந்து தம்பிக்காகவே

அநுபல்லவி.

பரிந்து தம்பிக்காகவே பீஷ்மன்
பட்டணந்தன்னிலேகவே (பலராமர்)

சரணம்.

கலேபோ தம்விப்பிரருடனே கடுகிகடிகிசென்றான்கண்ணன்
மலேபோல்அக்ரூர்கூடிமடக்குவரென்ன அண்ணன். (பல)
கிஷ்டனுக்கனேகமான கெடுதிசெய்வாரேயென்று
இஷ்டமாகபலராமன் எண்ணமனதிலேகொண்டு
அய்யனுக்குதவியாக ஆயர்களைக்கூட்டியே
கையிலாயுதமுதலாய்கலப்பைகளும்காட்டியே
தக்ஷணமேயூரைவிட்டு தம்பிதனைத்தேடியே
ராமதாசநாதனுக்குதவி லலிதமாக க்கூட்டியே.

வசனம்.

இவ்விதமாக பலராமனும் கண்ணனும் வேதியரும்தங்கள்பரிவாரங்களுடனே பீஷ்மன் நகரத்தில் ஒருபக்கம்கூடி சமயம்நோக்கி இருக்க சிசுபாலன்வந்து சேர்ந்ததைக் கேள்வியுற்ற ருக்மணி தான் தூதனுப்பிய வேதியர் வாராமையைப்பற்றி தன் பாங்கிகளோடும் விசனப்படுவது.

விருத்தம்.

ஆகபலராமன் கண்ணன் பக்கல்
அவ்விடத்திலொருபுறமாய்வீற்றிருக்க
யேகமாய்அக்ரூருமாம் வருகைநோக்க
பெதிராகபீஷ்மன்முதல் யாருஞ்சென்று
மோகமொடுஅழைத்ததிக் விநயமாக
முற்றுமேயுபசாரஞ்செய்துநிற்க
யூகமாய் இதைகேட்டருக்மணியுமன்று
உன்னுவாள் மனதைப்பண்ணுவாளே.

அகவல்.

"அன்பமாய்பாங்கி பெண்ணம்மணி கேளாய்
இன்பமாய்ச்சவுரி பானுற்ற வேதியரும்

இன்னமுந்தான்வர வில்லையென்செய்வேன்
முன்னிருப்பொழுதும் விடிந்திடலாச்சே
முரசுவாத்தியங்கள் முளங்கிடவந்த
வற்புரோகிதரும் வந்திடலாச்சே
விசுவாசமாய்தந்தை விடியக்காலத்தில்
சிசுபாலனுக்கென்னை சீர்மணம்புரிய
யெத்தனப்படுவரே யென்னநான்செய்வேன்
ஆற்றமிமாதெனக் கொன்றுந்தோன்றில்லையே
காதகசிசுபாலன் கருத்தின்னைக்கொண்டு
மாதன்னைக்கொள்ளவர்திடலாச்சே
ஆண்டியென் னண்ணன் அக்ரூரை அழைத்து
கொண்டுஇப்பொழுது கோப்பன்னவருவன்
எப்படியிருக்குதே யென்விதியம்மா
ஒப்பில்லாவேதியன் ஊற்றமாய்ச்சென்று
திருமுகமதனைத் திருதேவன்கையில்
ஒருமையாய்க்கொடுக்க உள்ளலஞ்சி
இருக்கின்றனரோ பேதும்நான் அறிவேன்
பெருக்குருவயதால்ப் பிராமணன்சேர்ந்து
கடக்கவொன்றது கடுவழிதன்னில்
தடக்கமாயெங்கும் தங்கிட்டனரோ
அல்லதுகண்டு அரையுனுங்கண்ணன்
லல்லமனதுடன் நாடாதிருந்தனரோ
பெண்வார்த்தையென்று பேசியேகெஞ்சி
யெண்ணியேசும்மா இருந்துவிட்டாரோ
ஓதருமந்த உறவினர்கூடி
மாதவன்தன்னை வழிமடக்கினரோ
மாயவனிங்கு வாராமையாலே
தூயவேதியரும் தூரநின்றரோ
பிர்மனெனக்கும் பிருதிவிந்தனக்கும்
வாமுடிபோட்டு வைத்தானேஇல்லையோ
யெத்தனைமாலை இட்டிடநாதன்
வந்திடுவாரோ வஞ்சியே அறியேன்
முக்கண்ணன்தேவி முறஅரிபாலனை
இக்கணஞ்சேர்க்க என்றாலோவில்லையோ

உத்தமன் தன்னை யுள்ளத்தில்யெண்ணி
பத்தியாய்விருதம் பாலிக்கவில்லையா
நயமாகயாவரும் நல்வேலைநாடிச்
சுயவரமிங்கு ஜோடிக்கலாச்சே
இனியென்னகாரியம் என்றுமேதனது
கனிஇதழ்வாயினாற் கதறியேநின்று
அன்னமேபொசியாள் அருந்துயில்கொள்ளாள்
நன்னயமாகநங்கையோடுரையாள்
கண்ணீர் துடையாள் கஸ்த்தூறிபொட்டிடாள்
வண்ணமாய்ச்சேலையும் வகையுடன் அணியாள்
கூந்தலிற்பரிமளம் குசுமங்கள்முடியாள்
மாந்தளிர் மேனியிற் மனமதுபூசாள்
பொங்கமாயுடலிற் பூசணமந்தரியாள்
மங்களமாக மாடத்திலுலவாள்
அழகியகண்களிற் அஞ்சனந்தீட்டாள்
பழகிழியுடன் பாஷணைபுரியாள்
இப்படி இருக்க யெழில்மதனனன்று
தப்பில்லவங்கனை தாங்கியேநிற்க
சந்திரன்தானும் சாந்தமில்லாமல்
விந்தையாய்கிசந்தணல் வீசமீதினிலே
மந்தமாருதமென் வழங்கிடும்தேற்றல்
தொந்தமாய்சேர்ந்து துயிறமோத
மயிலினமழகிய மாடப்புறாக்களும்
குயிலோடுகிள்ளைகள் கோஷமாய்கூவ
மாதுருக்மணிக்கு மய்யலுமீற
யேதுநான்செய்வேன் யென்னவென்விதியே
வகையொன்றும் அறியேன் மாலினர்செயலோ
தகையதுபெற்று த்தழைத்துவாள்வேனோ •
யென்றயமாகி யேக்கமேயுற்று
நின்றுமால்வரவை நீழ்விளிநோக்கி
ஆலோசினையால் அறிவுமேவிட்டு
பூலோகந்தன்னில் பொருந்தினளயிறை

கல்க்காணம்-கூச-பற்ஜணம்-கூ௰-ப-மூ-வ-கூஅ-பக்கம்

அகவல் முற்றிற்று.

வசனம்.

இவ்விதமாக சுவாமி வாராமையைபற்றி சந்தேகத்தால் மனது வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும் ருக்மணியும்மானேநோக்கி ஒர்தோழி கண்ணன் இப்பொழுது இங்கே எழுந்தருளி உன் இஷ்டப்படியே நடத்துவாரென்று தைரியம் சொல்லுதல்.

கொச்சகம்.

நாயகிஇவ்வாறு நடுங்கியேகலங்கி நிற்க
நேயமாய்த்தோழியன்று நிகரில்லாருக்மணிக்கும்
தூயமாய்துவாரகைக்கும் துரிதமாய்சென்றவிப்பர்
ஆயமாய்வாருவாரென்றே யன்புடனுரைக்கின்றளே.

இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

வருவாரடிமானே விப்பிரரும்இதோ
வருவாரடிதேனே

அநுபல்லவி.

வருவாரடிமானே மாதவனையழைத்து
தருவாரடிக்ஷேமம் தாரணிதன்னிலுழைத்து

சரணம்.

கோறிக்கையதற்கேர்க்க கோபாலனை சேர்க்க
வாரிஜதனநேத்ரி மனக்கவலைதீர்க்க (வரு)
அசூரபடையோட்ட அதுசவுரியங்காட்ட
வசுதேவன்சுதன்தன்னை மகிழ்ந்துஉன்னிடம்கூட்ட (வரு)
நல்லகுணம்பெய்ய நாளிதுஎன்றுஉய்ய
வல்லவருனக்கண்ணன் வந்துகைபற்றபய்ய
ராமதாசன்மனம்படி நாதன்வருவாரடி
அக்ஷயவேதியனும் அதிபுத்திமானடி (வரு)

வசனம்.

இவ்வாறு வதனசாதுபரியென்னும் தோழியுறைத்து நிற்கும்போதே சென்றவிப்பிரற் ருக்குமணி இடத்துக்கு வந்து தான்போய் வந்த சேதியைச் சொல்லுதல்.

விருத்தம்.

இப்பொழுது வந்துருவரென்றேயோதி
எதிரிருக்கும்பாங்கியனல் லோசைமுற்றும்

செப்பமாய் முடியாமலிருக்கும்போதே
சீராகவிப்பிரரும் சுபஞ்செதிகொண்டு
ஒப்புறவேயுற்றவரை கண்டுபொங்கி
ஒண்டொடியும் முபசாரந்தோடிருத்தி
யெப்படியாய்விட்டதுநீர் யென்றமாற்றம்
யேதென்றாள் மனங்களிக்க ஓதண்டாளே

இராகம்-நாதநாமகிரிகை-ஆதிதாளம்.

பல்லவி.

ருக்மணி விப்பிறரேசரணமும்கைகண்டபோதே
மெத்தவுஞ்சந்தோஷம்கொண்டேன்
செப்புமைய்யாசேதி ஸ்ரீஹரிவந்திங்கே
சேறக்கனவதுகண்டேன்

விப்பிற செப்பும்மைய்யாவென்ற செல்வியேஉன்னிடம்
சித்தம்மின்றுநிரைவேற
ஒப்பில்லாத அந்த கண்ணன்வந்தருளுவாற்
உன் திருமணத்துக்குசேற

ருக்மணி வருவரென்றுசொன்ன வார்த்தையைகேட்டுநான்
வந்துயிற்தரித்தங்கே இருந்தேன்
ஒருமையாகஉமக்கென்னபிருதி
யுபகாரஞ்செய்வேனுள்ளமுகந்தே

விப்பற செய்யவேனென்ற அந்தச்சீருளதங்கிய
சித்தம்மிருந்திடில்போதும்
உய்வேனுண்மையாக ஒண்டோடியேஇந்த
உலகினிகுறைஇல்லே யோதும்

ருக்மணி உய்வேனென்றுசொன்னஉண்மைகுலதெய்வம்
உத்தமரேவெகுதூரம்
நையாளுக்காகவே சென்றுவந்தீரென்னை
க்ஷமிக்கவேணுமிந்தநேரம்

விப்பிர க்ஷமிப்பதென்னவந்தசுவாமிசேர்வையெனக்கு
சம்பவித்ததேபெரும்பாக்கியம்
அமைப்பில்கரும்புத்தின்னக் கூலியும்கேள்ப்பரோ
அதுபோலாகுமேயோக்கியம்

(ருக்மணி) புரிவதும்உம்மாலே புருஷாகாரியாக
போய்வந்தபுனித அந்தணனே
பரிவுடனுந்தனுக்காயிரம்நமஸ்காரம்
பண்ணினே முதசத்வகுணனே.

வசனம்.

இவ்வாறு சுபசேதி ருக்குமணியமமனுக்கு வேதியர் சொல்லிக் கொண்டிருக்கும்போது கண்ணன் தன் பறவாறத்தோடு நற்கண்ட பீஷ்மாராஜன் யெதிர்சென்று தகுந்த உபசாறத்தோடும் அழைத்துவா சபையிலுள்ள பெரியோர்களும் அம்பத்தாறு தேசத்து ருசாக்களும் அந்தபட்டணத்திலுள்ளமகாசனங்களும்கண்ணன்ரூபலாவண்ணியத்தை உற்றுற்று பார்த்து ஆனந்தமாய் கண்டு புகழ்தல்.

விருத்தம்.

வேதியனும்சுபமாக ருக்மணிக்கு
விரும்புமுன் கருத்துடனே கூடுமென்றான்
ஆதியாய்விளங்குமரி கண்ணனாக
அவதரித்த வெம்பெருமான்வருதல்கண்டு
சோதிடிருமணிக்கிரீடம் பீஷ்மனோடிச்
சுந்திரமாயு,சரித்தே யழைத்துநேற
நிதியுடையபெரியோர்கள் வணங்கியன்று
நிசமென்றார் பாக்கியத்தின்வசமென்றாரே

இராகம்—பந்துவராளி—ஆதிதாளம்.

கண்ணிகள்.

கண்ணனைக்கண்டவுடன் கண்ணிருக்மணிக்கிவற்
கணவனென்றுறைத்தாற்கள் சிலபேர்கள்
விண்ணனைமாலையிட யென்னதபம்செய்தாளோ
மெல்லிருக்மணியென்றார் சிலபேர்கள்
இந்திரன்ஆதியந்த இமையவன் தானோவென்று
யெண்ணிபிர்மித்துநின்றார் சிலபேர்கள்
மந்திரமறையவர் வணங்குநாதனென்ன
மதித்துக்கொண்டேஇருந்தார் சிலபேர்கள்
அங்கஜந்தானோவென்று ஐயம்மனதிற்கொண்டு
ஆச்சரியத்தோடிருந்தார் சிலபேர்கள்
பொங்கும்மன்மதநாகில் பூங்கணையெங்கேயென்று

புனிதனுகவேயுரைத்தார் சிலபேர்கள்
கோடிசூரியன்போல் விளங்குகிறுமரென்று
கூடியேகோசித்தார் சிலபேர்கள்
மேட்டிமையாகவரும் மேகவண்ணனைகண்டு
மெச்சிகைதட்டிநின்ருர் சிலபேர்கள்
சதுர்முகன் இருவருக்கும் சரியானரூபத்தை
சமைத்துவைத்தானேயென்ருர் சிலபேர்கள்
எதிராஞ்சிசுபாலனைச்செய்துருக்மணிமாதை
இவரேபடைவாரென்ருர் சிலபேர்கள்
கெதிபாகவெல்லவர்க்கும் கேட்டவரமருளும்
கெருடவாகனன்னென்ருற் சிலபேர்கள்
ராமதாசன் மகிழுமங்கைருக்மணிக்கிவர்
மணவாழரென்றுரைத்தார் சிலபேர்கள்

வசனம்.

கண்ணன்தன்பரிவாறத்தோடும் பீஷ்மகாத்திற்கெழுந்தருளிய சேதியைக்கேட்டசிசுபாலனுடைய சயினியத்திலுள்ள வீரதங்கள் பருக்கிரமங்களை சொல்விக்கண்ணனை யேசுதல்.

விருத்தம்.

நீதமாய்ருக்மணியைமாலைசூட்ட
நிச்சயமிப்புருஷனென்றேயுறைத்தார்
காதகருஞ்சிசுபாலன் சேனையன்று
கருதிவந்தசோதைமகன் சேதிகேட்டு
ஆதரவாற்இவனுக்காற் இங்கேயென்று
அவனவனுக்குண்டான் திறமைகூறி
பேதகமாம்கண்ணனையே யவர்களெல்லாம்
பேசுவார்இடையனென்றேபேசுவாரே

இராகம் மோஹனம் ஆதிதாளம்.

பல்லவி.

திரண்டுமூண்டுலோகமும் ஒன்ருவந்தாலும்பீஷ்மன்
திருமகளைவிடேனென்ருன் ஒருமூடன்
பிறண்டுதேவகி மைந்தன் சேனையை
பிறன்அடிப்பேனென்ருன் ஒருமூடன்
அயன்முதலானோரும் அவனுக்குதுணைவறில்
அடித்துஜெயிப்பேனென்ருன் ஒருமூடன்

பயமில்லாமல்வந்த பசுமாட்டிடையரை
பாரில்முடிப்பேனென்றான் ஒருமூடன்
இளையாருந்திருணிக்கி இவனுக்குதவிவந்தால்
இடித்துப்புடைப்பேனென்றான் ஒருமூடன்
வளையவேவந்த வாதியின் சேனையை
வதைத்திடுவேனென்றான் ஒருமூடன்
விண்ணவரெல்லாரும் கூடியெதித்தபோதும்
மெலிசாவிடேனென்றான் ஒருமூடன்
கண்ணனைச்செயித்துநான்
அலங்காரமாய்ச்சரிகை ஆடைஅணிகள்பூட்டி
குலுங்கவேபுஷ்பங்கள் கோதைமுடியிற்சூட்டி
பிருத்தனைமுடித்தபின்பெண்கொடியகைகொணர்ந்து
கீர்த்தியுடனேமணம் கேழிக்கையும்புரிந்து
திருமணப்படியே திவ்வியமாகமுடியும்
பெருகும்ருக்மணியின் பிறிதிப்படிவிடியும்

வசனம்.

இவ்வாறுபீஷ்மன் சராசந்தனுக்குரைத்து ருக்மணியை அலங்காரம்செய்யும்படி தாதிகளுக்காக்யாபிக்க உடனே அவர்கள்ருக்மணிக்கு அலங்கரித்ததை சொல்லுதல்.

விருத்தம்.

குண்டினபுரத்துமன்னன் க்கூறுஞ்சொல்லை
கோலமுடிசராசந்தன் க்கேட்டபோது
கொண்டலெனநால்புறமும் தனதுசேனை
கூடவேவளைந்திடவும் செய்துநின்றான்
அண்டர்களும்வியக்க ருக்குமணிகைகிட்டி
அண்ணநடைபெண்களெல்லாம் மறந்தமாகச்
சென்றலங்காரன் சதிஇவள்தானென்று
சேர்ந்திட்டார்அலங்கரிக்க நேர்ந்திட்டாரே.

இராகம் பிலகரி ஆதிதாளம்.

பல்லவி.

சிங்காரங்கள்செய்கிறார் ருக்மணிதேவிக்கு
சிங்காரங்கள் செய்கிறார்.

அநுபல்லவி.

சிங்காரங்கள்செய்யவும் சேதறைகள்உய்யவும்
அங்கணுமனியைதூய ஆபிறநாமணுக்கிய (சிங்)

சரணம்.

திருமஞ்சனங்களாட்டி பீதகவாடை
தேவியிடையிற்கூட்டி
பெருமைவல்லிக்கு பிறிதியுள்ளமெல்லிக்கும்
கருமுகில்வண்ணனுக்கேர்க்ககடையன்சிசுபாலன்பார்க்க(சி
கோதிகூந்தலேவிடுத்து குடமல்லிகை
கொழுந்துவேர்களும் யெடுத்து
சோதியுள்ள மங்கைக்கும் சுந்திரமாம்நங்கைக்கும்
நீதிகண்ணனுக்காயமெல்ல நேரிழையாளுக்கும்நல்ல (சிங்)
பணிகள் அனேகம்பூட்டி மதிமுகத்தில்
பாங்காககஸ்தூரி தீட்டி
அணிபொருந்தியமித்திரியை அரசனுடையபுத்திரியை
மணிவண்ணனிடத்தில்கூட்ட மாதுகவலேயோட்ட (சிங்)
ராமதாசனையழைத்து நீலவேணிகள்
லாவண்ணியமாய் த்தழைத்து
தக்ஷணமேபாவியை தரணியில்நல்லீலையை
பக்ஷவாகனனுக்கென்று பாவையர்கள் பாடிநின்று (சிங்)

வசனம்.

இவ்விதமாய் அலங்காரஞ்செய்துகொண்ட ருக்மணியம்மன் தன் தோழிமார்களோடும் பந்துவர்க்கங்களோடும் கௌவுரி தேவியைப்பூசிக்க வருதல்.

விருத்தம்.

சிங்காரம்இவ்விதமாய் ச்செய்தபினனர்
சேர்ந்தவர்கள்மகிழ்வாக ப்பாடிநேர்ந்து
இங்காரும் இவளுக்கே யிணையாய்ச்சொல்ல
இவ்விடத்தில்லொருபெண்ணும் இல்லையென்றும்
கங்காதரன்தேவி தன்னைப்போற்றக்
கருதியேகண்ணனையே தோயும்வாறுய்
மங்களவாத்தியமுளங்க சன்னதிக்கு
மண்டினார் பூசைசெய்ய அண்டினரே.

இராகம் பூரி கல்யாணி ஆதிதாளம்.

பல்லவி.

கௌரிபூசைசெய்யவருகிறுள் கன்னிருக்மணி
கௌரியைகோரி கௌரிபூசைசெய்யவருகிறுள்

அநுபல்லவி.

கவரியிருமருங்கும்வீச கச்சைகளிரு கழல்களிலும்
கல கல கல கலகவெனவே (கௌரிபூசை)

சரணம்.

மிக்கமுத்துக்குடைபிடிக்க
மெல்லியர்கட்டியம்படிக்க
தக்கபேரிகையடிக்க
தங்கபணிகளும்பூண்டு தக தக தக தகவெனவே (கௌ)
உருமைமணக்கோலம்நாடி
உறவினர் பலர்களுங்கூடி
பரிமள மலர்களைச்சூடி
பட்டுத்துகிலுந்தரித்து பள பள பள பளவெனவே (கௌ)
அன்னபேடை யணநடையாள்
அழகிய துடியிடையாள்
கன்னலெனும்மொழியுடையாள்
கலவைகளிதமுடனிந்து கம கம கம கமவெனவே (கௌ)
ராமதாசன்கோறிக்கைப்படிய
நல்வேதியன் சொல்முடிய
தக்ஷணம்சிசு பாலனிடிய
தரணியிலெவருங்களிக்க தள தள தள தளவெனவே (கௌ)

வசனம்.

இவ்வாருவந்த ருக்மணிதேவியைத்தான் கொண்டகருத்தின்படிக்கண்ணனேயே தன் பத்தாவாக நேமித்தருளும்படி கௌரியம்மனை பூஜை செய்தல்.

விருத்தம்.

வருகைவாரிதிபோலுமிந்திரன்கை
வாள்போலும வானத்திலுலவுகின்ற
உருவானசந்திரன்தன் ஒளியைப்போலும்
உறகறத்தினமுடைய காந்திபோலும்
தருநிலமைப்போலுமிவ் வுலகத்தோர்க்குத்
தாய்போலுமிதுகாலுங் காணக்கூடாச்
சுருதிமூலப்பொருட்குச்சொந்தம்போலும்
சூழ்ந்திட்டாள் பூசைதனி லாழ்ந்திட்டாளே.

இராகம் பைரவி சாபுதாளம்.

கண்ணிகள்.

கௌரியே யுன்னைப்பூசைசெய்கிறேன்கனபத்தியுடனே
கற்கல்களில்மலற் யெடுத்துப்பெய்கிறேன்
கௌரியேயெந்தன் பதியாயருளுவாய் ஓலோகமாதா
சதியெனக்கந்தவரமே வரமேதருகுவாய்
கன்னிகாவிரதத்தைத் தீர்த்திடும் கமலக்கண்ணி
கண்ணைத்திறந்துயென்னை பார்த்திடும்
உன்னியபிஷேகம்பண்ணுறேன் ஓசங்கரன்தேவி
உன்னைகுலதெய்வ மாகயெண்ணுறேன்
பட்டுச்சேலையுன்னிடையிற்சாற்றுறேன் பார்வதிதேவி
பரிந்துன்னைமிகப் பரிந்துபோற்றுறேன்
மட்டில்லாதபணிகள்பூட்டுறேன் ஓஅம்பிகாதேவி
மணமாமலர் முடியிற்சூட்டுறேன்
குங்குமப்பிறை நுதலிலணிகிறேன் சாமளாதேவி
குறைகள்தீர்க்க யுன்னைப்பணிகிறேன்
சங்கரன் மகிழ்ந் தணையுமீஸ்வரி ஓங்காரதேவி
சமயந்துணைசெய்வாய் சர்வேஸ்வரி
தும்பைவில்வம் பூசைசெய்கிறேன் காளிகாதேவி
தூபதீப நைவேத்தியந் தாறேன்
நம்பிவாயனம் மாதர்க்கீகிறேன் ஓகிராமதேவி
நங்கைமிகவும் மகிழ்ச்சியாகிறேன்
அன்னைதந்தையும்நீ யென்னம்மணி திரிபுரசுந்தரி
அரியையென்னிடங்கூட்டு அம்மணி
மின்னிடையாள்மனதீடேறவே ஓசாம்பவியிந்த
மெல்லிக்கிறங்குங்கருணை கூறவே.

வசனம்.

இதுவும் கௌரிதேவியை வரம்கேட்குதல்.

விருத்தம்.

பூசித்தகோமக்களைப் பெண்களெல்லாம்
பொன்மலர் அச்சதையெடுத்துச்சிறமேலிட்டு
யாசித்தபேர்களுக்குப் பொருளுமீந்து
அவனியில்நீ வாழ்கவென்ன ஆசீர்கூற.

நேசித்தநித்தியகல் யாணதேவி
நினைத்தபடி படிநேறவேண்டுமென்று
மாயசித்தமேஸ்வரியைப்பாடிநின்று
மகிழ்ந்திட்டாள் வரமீயப் புகழ்ந்திட்டாளே.

இராகம்-அபுருபம்-அட தாளம்.

பல்லவி.

பார்பதி கண்ணனையே என்
பதியாய்ச்செய் (பார்வதி)

அநுபல்லவி.

பாரெல்லாமுந்தன் கீர்த்திவிருந்திட
பாலகோபாலனைப்புரிந்திட (பார்வதி)

சரணம்,

நாறணியன்னப்பூறணியேகேளும்
காறணன்மீதெனக்குக்குறிப்பு
கல்யாணம்செய்வதுந்தனுக்குப்பொருப்பு (பார்வதி)

கிஷ்டியேயென் இஷ்டமதனைகேளும்
இஷ்டனைப்பதியாகக்கூட்டும்
துஷ்டசிசுபாலனையோட்டும் (பார்வதி)

ஈஸ்வரிமயேஸ்வரியேகேளும்
கேசவனென்னை தேரிலேற்றவும்
ஆசையாய்ப்பூ மாலைசாற்றவும் (பார்வதி)

மங்கையேகிருஷ்ணன் தங்கையைநீர்கேளும்
சங்கையில்லாமலே வரிக்கவும்
மங்கல்ய சூத்திரம் தரிக்கவும் (பார்வதி)

வசனம்.

இவ்வாறுபூசித்து வாமும்பெற்ற ருக்மணிசூழ்ந்திருந்த பரிவார ங்களும் தோழிகளும் பிரமிக்கும்படிமோகனரூபம்கொண்டதைசொ ல்லுதல்.

விருத்தம்.

தேவர்களும் மெச்சவே யீஸ்பரிதையன்று
திரமாகப்பூசித்து வாமும்பெற்று
காவலனைத்தான்நினைத்த கண்ணனுக்கு
கருதியபோல்வந்தனனோ இல்லையோவென்று

தாவவரும் தன்சகியைப்பார்ப்பவள்போல்
தலைமயிரை தள்ளுவளாய் திரும்பிநோக்கி
ஆவல்தரும் மோகனரூபத்தைகாட்டி
அடைந்திட்டாள்பிர்மிக்க வெடுத்திட்டாளே

இராகம் மத்தியாமாவதி ஆதிதாளம்.

பல்லவி.

விரதமோகினியாகிவந்தாள் ருக்மணிதேவி
மேதினியோர்க்குகாக்ஷிதந்தாள்

அநுபல்லவி.

விரதமோகினியாகி விண்ணவர் துதிக்கரிய
உரகசயணன் தன்னையுகந்துமணம்புரிய (விறக)

சரணம்.

கருமுகில்போலளகம் உடையாள்மிகத்தளிர்த்த
கதலிதன்னைபழிக்குந் தொடையாள்
உருவமமையிந்த அன்னநடையாள்காணுவதற்கு
உண்டோ இலையோ என்னுமிடையாள்
உன்பறம்பையரும் உளமதனிற்பிர்ம்மிக்க
இன்பமுனிவர்களும் இதயமதில்துதிக்க (விறக)
சேலைநிகர்த்தவிழிமன்ன மாலைப்பொழுதின்
செவ்வான மொத்துமகரந்துன்ன
பாவினினியமொழிபண்ண வெண்டானம்போல்
பற்கள்பளபளென்னமின்ன
பகரும்சந்திரவிம்ப வதனமது துலங்க
திகளுங்கனக்கும்ப ஸ்தனமிரண்டுங்குலுங்க (விறக)
அகூரர்படைகளுஞ்சலிக்க தங்கசரிகை
ஆடையாபரணஞ்சொலிக்க
வாசுதேவபுத்திரனுங்கெலிக்க ஜெயபேரிகை
மங்களவாத்தியம் மொழிக்க
மல்லிகைமுல்லைமலர் வகித்துபரிமழிக்க
அல்லும்பகலுமிந்த அம்புவியோர்களிக்க (விறக)
வானத்தவர்களெல்லாமொன்றுநோக்க ருமதாசன்
வல்லவனுக்கெதிரிற்சென்று
சேனையுடனே கூடிநின்று அகூரு திகள்
செருக்குடனேசேர்ந்து அன்று

செல்வியில் மிகுந்திடுஞ் சேயிழையேகனா
திவ்வியரதத்தின்மேல் தீவரம்யேறென
விறகமோகினியாகிவந்தாள் ருக்மணிதேவி. (விறத

வசனம்.

இவ்வாறு மோகன ரூபங்கொண்டு கண்ணுங்கருத்தும் கண்ணனையே தேடிநிற்கையில் பலராமர் தம் தம்பியை இது சமயம் ருக்மணியை யெடுத்து ரதத்தின்பேரில் வைத்து துவாரகைக்கு செல்வாயென்று உறைத்தல்.

விருத்தம்.

விரதமோகினியாகி ருக்மணியுஞ்சூழ்ந்த
வீணர்களையக்கணத்தில் மயக்கச்செய்தாள்
நிறதபலராமருடன் கண்ணன் தன்னை
நெருங்கியே இதுசமய மென்றுரைத்து
பறதமிகுபுறிசனங்கள் நடுவுதன்னில்
பண்பாகவிருக்குங் கன்னியையிப்போது
சாதமுடன் எடுத்துநீ செல்வதெந்தன்
சம்மதியென்றூற் சேர்ப்பது நற்பதியென்றூரே.

இராகம் மத்தியமாவது சாபு தாளம்.

பல்லவி.

இதுவே நல்லசமயம் ருக்மணிதன்னை
யெடுத்துவந்திடி லமையும்

அநுபல்லவி.

இதுவே நல்லசமயம் எண்ணிமனதில் நன்று
அதிதுரையாகச்சென்றால் ஆகும் காரியமின்று (இது)

சரணம்.

விதர்ப்பதேசன்புத்திரி வேந்தர்குலத்து
மெல்லியந் தங்கள் மித்திரி
மதித்துன்னுடனேகூட வந்திடுவாள் வெல்வாய்
மாற்றுரையெளிதினில் வல்லமையால்வெல்வாய் (இது)
கோரியுன்னைத்தெரிந்து கொடுமதியாற்
கூட்டத்திலே இருந்து
பாரினில்வாடுறாள் பக்ஷமுடனேநாடி
தேரினிலேற்றி தீவறமாய்யோடி (இது)

துஷ்டருக்குமன் தங்கைமனதில்
துயறமாகிருள் மங்கை
இஷ்டம்பூர்த்திசெய்ய இதுவேநல்லகாலம்
இன்பமுடனேசெல்வாய் இருகின்றதனுகூலம்
இதுவே நல்லசமயம் ருக்மணிதன்னை (எடு)

வசனம்.

கண்ணன் தனதண்ணன் சொல்லிய வகைகளுககு மெச்சி உடனே ரதமீதெடுத்துக்கொண்டு செல்லுதல்.

விருத்தம்.

அண்ணன் உரைத்தவெல்லாம் கண்ணநின்று
அருமையாய்த்தன் மனதிலமரவிட்டு
வண்ணமுடனே சென்று வஞ்சிக்காக
வருதிரண்டசேனைகளை விலக்கியங்கு
பண்ணமைந்தமொழியாள் ருக்மணியைக்கண்டு
பட்சமுடனவன்பயத்தை முற்றுநீக்கி
எண்ணரியகீர்த்தி மணங்கொள்வோமென்று
எடுத்திட்டார்ரதமீது விடுத்திட்டாரே.

இராகம்—தன்னியாசி—ஆதிதாளம்.

கண்ணிகள்.

எடுத்தாரே ருக்மணியைக் கரத்தில்
விடுத்தாரே ரதத்தில்
கெடுத்தாரேவந்த எதிரிகளதமாய்
கிளிமொழியாட்கிதமாய். (எடு)
யானைகளாதி சேனையை யெல்லாம்
அடித்துத்துரத்தியோட்டி
வானவருடைய நாதனுமன்மத
வடிவுதன்னைகாட்டி (எடு)
சுற்றிவளைந்த சேனைகளெல்லாம்
ஸ்மரணையும் மறந்திருக்க
அத்தருணத்தில் அத்திருமகளை
அன்புடனாதரிக்க (எடு)
தம்மையேகோரி யிருக்கிறுளென்றவள்
தாபங்களை நீக்கி

நிம்மதியாகவே நீலமேகனும்
நிமிஷத்திலே தூக்கி (எடு)
பக்கத்துதவியாய் வந்திடும்சூரப்
படைகளெல்லா மொழிய
அக்கராமதாசன் நாதன்மேலமாரும்
அன்புடன் மலர்பொழிய (எடு)

வசனம்.

இவ்வாறு ருக்மணியைக் கண்ணன் ரதத்திலேற்றிச் சங்கத்தை பூரித்துபோனபிறகு மயக்கம் நீங்கி தெளிவு பிறந்த படைகளும் பரி ஜனங்களும் கண்ணனைத்தூஷித்தல்.

விருத்தம்.

யெடுத்துடனேருக்மணியை ரதத்திலேற்றி
யெழில்கண்ணன் துவாறகையைநோக்கிச்செல்ல
தடுத்தவரையடித்தோட்டி யங்குமிஞ்சத்
தயங்கிநிற்குஞ் சேனைகளும் நடுங்குமாறு
அடுத்திருக்கும் பாஞ்சனியம் யெடுத்தேயூத
அங்கிருந்த அரக்கரெல்லாமெழுந்து
கெடுத்திடுவோமடப்பயலே இப்போவென்று
கிளம்பினர்சவுரியங்கள் விளம்பினரே.

இராகம்-நாதநாமகிரிகை-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வெண்ணை திருடி வீடுதோறும் உண்டதுபோல்
வேகமாகவிங்குவந்து பீஷ்மன்
பெண்ணை திருடிக்கொண்டு போகிறவனையின்று
பிடித்துவருவேனென்றான் ஒருவன்
சுற்றிலுமனேகசூரர்களிருக்கையில்
சூதாகவேயங்குவந்து அறியாமல்
அத்தருணம் அந்த அரிவையை எடுத்தோனை
அழியச்செய்வனென்றான் ஒருவன்
பாரினில்ஸ்திரிகள் மத்தியிலிருந்த
பாவைகைபிடித்தவன் தன்னை இப்போ
வீரியமுடனே வாளுக்கிரையாக
வீசிவருவான் யென்றான் ஒருவன்

சிசுபாலனுக்கென்று நிச்சயித்தவளை
ஜெகத்தோர்நகைக்கவே செய்த அந்த
வாசுதேவனுடைய மைந்தன் கர்வத்தை
வாங்கிவிடுவேனென்றான் ஒருவன்
இத்தனைபேரையும் இந்திரசாலஞ்செய்து
இளிக்கச்செய்திட்டவன் தன்னை இதோ
குத்திவிளத்தள்ளி கோதைருக்குமணியை
கொண்டுவருவானென்றான் ஒருவன்
பஞ்சலக்ஷம் இடைப்பெண்களைப்போலிந்த
பத்மினியை யெடுத்தவனை தூரம்
மிஞ்சவொட்டாமல் ஓடினான்மரித்து
மீட்டுவருவேனென்றான் ஒருவன்

வசனம்.

இவ்வாறு விருதுகூறி நிற்கும் சேனைகளுடனே ஜராசந்தன் சென்று கன்னிகையைக்கொண்டுபோகும் கண்ணனை வழிமரித்ததைச் சொல்லுதல்.

விருத்தம்.

மூடருரைத்திடுஞ்சொல்லைக் கேட்டந்த
 மூர்க்கமுள்ளசராசந்தன் பகைமேல்கொண்டு
ஆடவர்முன் திருடனைப்போலிடையன்வந்து
 ஆண்மையொன்றுங்காட்டாமற் கன்னிதன்னை
கூடமனம்புரிந்திடுவோ மென்றுதேரில்
 கொண்டுமகிழ்வாகவே போனானென்ன
சேடனுமேபுகலரிய கண்ணன்முன்னே
 சென்றிட்டான் விதியென்ன வென்றிட்டானே

இராகம் பிலகரி சாபுதாளம்.

கண்ணிகள்.

நின்றுத்தரஞ்சொல்லிப் போடா
நீதியற்ற மூடனே
அன்றுயுத்தஞ் செய்தொளித்த
அஞ்சா வஞ்சா நெஞ்சா பஞ்சா (நின்)
தயித்தியனுக்குரிய மாதைத்
தான்கிரகிக்கலாமோடா

பயித்தியனே யெனத்திரும்பி
பாரு கூறு ஊரு சேரு (நின்று)
பிண்டிபாலம் சூலம் முசலம்
பிலத்த வாயுதங்களும்
கொண்டுநாங்கள் வந்தோமிதோ
குள்ளா கள்ளா உள்ளா விள்ளா (நின்று)
சுற்றியே வளைத்து நாங்கள்
சோருவுந்தன் மேனியை
குத்தியடித்திப்போரத்தம்
குடிப்போம் கடிப்போம் பிடிப்போம் ஒடிப்போம் (நின்று)
தேரில் மங்கையை யெடுத்து
தீவிரமாய்ப்போகிறாய்
நேரில் யுத்தஞ்செய்திடுவோம்
நில்லு வெல்லு சொல்லு செல்லு (நின்று)

வசனம்.

இவ்விதமாக சராசந்தன்விருதுகூறிப் பின் தொடர்ந்து வருவதை கண்ட பலராமர் தம்பியை ருக்மணியோடும் துவாரகைக்கு போகும் படியுறைத்துத்தானும் தன்பரிவாரங்களோடும் அவர்களைப்பின் தொடரவொட்டாமல் அடித்துத்துரத்திவிட்டதை சொல்லுதல்.

விருத்தம்.

நில்லென்று சொல்லியெரும்பலாக
நெருங்கிய மூடர்களும் கூறும்போது
கல்விமதிமிகுந்த பலராமனன்று
கண்ணனை ருக்மணியுடனே துவார்கைக்கு
செல்லுமெனத்தானனுப்பிவிட்டங்குள்ள
சேனையோடு ஜராஸந்தன் முதலினோரை
வல்லிருப்பாயுதங்களன்று கையிலெடுத்து
வாட்டினான் சண்டையிட்டு ஓட்டினனே.

இராகம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

சண்டை செய்கிறான் பலராமன் அசுரருடன்
சண்டை செய்கிறான்—பலராமன்

சரணம்.

மண்டலபீதினில் மகத்துக்கள்களிக்க
அண்டியவசுரர்களும் அன்றுடனொளிக்க
கண்டகண்டமாகக் கறமுடல்நெளிக்க
அண்டையில் உதவியாரெனவிளிக்க (சண்)

கலப்பையையவர்கள் கழுத்திலேமாட்டி
மலைக்கவோரிடத்திலே மடக்கியேகூட்டி
சவிப்புறபூமியிற் சாய்ந்திடவோட்டி
புலக்கைகளாலுடல் பிளந்திடவேவாட்டி (சண்)

கத்திகட்டாரிகள் களமதிலெரிய
சுற்றியேவந்த சூறருமுறிய
மதத்திலிருந்தவர் மண்டையுஞ்சரிய
அத்தனைபேர்களு மழிந்திடவேபெரிய (சண்)

அசுவப்படைகளோடு அணியணியடுத்து
அசுரரேவியகணை யனைத்தையுந்தடுத்து
இசையானவாயுதம் எண்ணறவிடுத்து
விசையாக வந்தவர் மீதிலேவிடுத்து (சண்)

அடவியிலெங்கும் அணுத்திரள்பறக்க
வடிவுருசேனைகள் வல்லுயிர்துறக்க
மடையருக்குளமதில் மயக்கமும்பிறக்க
படிவினிலெங்குமே பலர்களுஞ்சிறக்க (சண்)

வந்தசருசந்தன் மதத்தினையடக்கி
சந்தித்தசால்வனை சக்தியொடுக்கி
தொந்தியிடும்பனைத் தூக்கியேஇடுக்கி
புந்திபவுண்டரீகனை முற்சிக்கவேமடக்கி (சண்)

சேனையிற்சிலர்கள் சிதரியேஓட
ஏனையசூரர் இடிபட்டுவாட
கானத்திலழுகுறல் கடலினும்நீட
வானத்தில்தேவரும் வந்துடன்நாட (சண்)

துண்டந்துண்டமாகத் துடித்துடல்மேவ
ஒண்டியெவ்விடத்திலும் உதிரமும்பரவ
அண்டியேவருத்தத்தால் அனைவருங்கூவ
கண்டோரமதாசன களித்தவனுபுலாவ (சண்)

வசனம்.

இவ்வாறு பலராமனால் அபஜயமாகித் திரும்பிய சிசுபாலனை ச
ராசந்தன் கண்டு நீதியுரைத்துத் தைரியப்படுத்துதல்.

விருத்தம்.

இந்தவிதம் பிணமாகிச்சிலபேற்றார்
ஏகமாயந்தகன் னூரடைந்தான்
நந்தர்கு தன்செய்கையினைக்கண்டு அஞ்சி
நாணியேசிலவரச ரோடனுற்றுற்
மந்தமதிசிசுபாலன் விசனத்தாலே
மாலையிடமுடியாதால் மறைந்து போக
நந்தனுறுஞ்சமயமதில் ஜராசந்தனேகி
நாடினான் இதவுசொலக் கூடினானே.

இராகம்-ஸ்ரீராகம்- அடதாளம்.

பல்லவி.

சொல்லுரேன்கேளடா சூட்சகக்கொஞ்சம்
சிசுபாலனேவாடா.

அநுபல்லவி.

சொல்லுகிரேன்கேளுன் சோகமோகந்தீர
வெல்லுகிரேன்நானே வேந்தனேநீயார் (சொல்)

சரணம்.

தேகத்திலேயுயிர் இருந்தாலிப்படிபட்ட
ஸ்திரீகள்பலரைக்காணலாம் இந்த
தேகம்போனாலப்பா பிராணன்வருமோடா
தெருவையைநினைந்துநீ திபங்கிவாடாதேநான்
தெய்வசங்கற்பமிப்படி யிருந்ததேயாகில்
சிந்தித்தால் பயனேதடா இப்போ
தெய்வமவனிடத்தில் தென்னருள்புரிந்ததால்
தேவகிமகன்பக்கல் ஜெயமுமிருந்ததடா
பூபகமான இப்பூமியின் வாழ்க்கைமுற்றும்
பொம்மலாட்டந்தானடா இதை
நாடி இங்கேவந்து நாணத்தையுமிழந்து
நான்பட்டபாட்டையும் நன்றாகவேயுனக்கு
இருபத்துமுக்கோடி யக்ரோணியையவர்
பதினேழுதடவைவென்றார் பின்பு

வருபதினெட்டாந்தர மந்தமடையனை
மலைபோலே பெரித்த வல்லமை அறியாயோ
நாளையத்தினத்திலே ராஜராஜர்களோடு
நானவிடஞ்சென்று அந்த
காளை இடையன்வந்து கருதிக்களவுசெய்த
கன்னியைகொண்டுந்தன் கண்முன்னே விடுகிறேன்
சுகத்தில்களிப்பாயும் சலிப்பிற்றுக்கமாயும்
சொல்லுவார்உலகத்தோர்கள் அப்படி
இகத்தில்நான் திரியாமல் பெண்ணாமதாசர்பதி
யெதிர்த்தாலும்வென்று இங்குநான் திரும்புவேன்
சொல்லுகிறேன்கேளடா சூட்சமாய்க்
கொஞ்சம் சிசுபாலனேகேளடா

வசனம்.

இவ்வாறு சரூசந்தனல் தைரியங்கூறகேட்ட சிசுபாலன் சேனைகளுடன் தன் நகரம் சென்றதையும் கண்ணன் ருக்மணியை யெடுத்துப்போனதையுங் கேள்வியுற்ற ருக்மணியின் அண்ணன் தன்டுதனங்களோடு சென்று கண்ணனை யெதிர்த்தல்.

விருத்தம்.

திருத்தமாய் சரூசந்தனுரையினாலே
தீவறமாய்ச்சிசுபாலன் நகரஞ்சேர்ந்தான்
வருத்தமாய்ருக்மனும் கண்ணனசெய்த
வஞ்சனையேமனம் கொதிக்க கேட்டெழுந்து
பருத்தரதமீதேறி சேனைச்சூழ
பயணமாய் வெகுவிரைவில்போய்மடக்கி
ஒருத்தனைத்தங்கையினைக் களவுசெய்த
ஒளிவென்றான் இது இனிவென்றானே.

இராகம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

யேனெடுத்துபோறாய் திருடா இப்போ
யென்தங்கையை விட்டுவிடடா

அநுபல்லவி.

தேன்மொழியாள் தன்னைதேரில்கொண்டுசெல்லும்
திருடா திருடா திருடா விடு விடடா

சரணம்,

ராசன்பிஷ்மன்சுதன்நானடா வருமோ
நல்லமதியுனக்கு தானடா
மாசில்லாகோத்திரகுலமடா யானும்
மனதில் நீயரியாததேதடா
வஞ்சித்தென் தங்கையை வந்தெடுத்துப்போரும்
வாதா வாதா வாதா விடுவிடடா (யேனெடுத்து)
யெந்தயிடத்தில் பிரந்தாயடா அப்பால்
யெங்குபோய் நீ சிறந்தாயடா
புந்திகலங்கூரந்தாயடா அரசன்
புத்திரியென்பதை மறந்தாயடா
அடவியில்மாடுகள் மேய்த்திட்டபுத்தியோ
அதமாய் அதமாய் அதமாய் விடுவிடடா (யே)
நிசமென்பதொன்னிடமேதடா சொல்லாய்
நிருங்குமுன்வாழ்வு நில்லாதடா
இசையுமிவ்வேலைதகாதடா சொன்னேன்
யென்னாளுமுனக்கிதுநீதடா
யேளிதமாகவே இப்படிசெய்திட்டாய்
இடையா இடையா இடையா விடுவிடடா (யெ)
காயம்வேண்டுமானால் நில்லடா யெந்தன்
கருத்துத்தங்கையை விட்டுச்செல்லடா
பேயனேநீயென்னசொல்லடா பார்ப்போம்
பேசுயென்றனை நீ வெல்லடா
தொல்லுலகிலுன்னை தூஷிக்கநேரிடும்
துஷ்டா துஷ்டா துஷ்டா விடுவிடடா (யெ)

வசனம்.

இந்த விதம் தூசித்த ருக்மனை கண்ணன்நோக்கி புன்சிரிப்புகொண்டு அவனைப்புடைத்ததைச்சொல்லுதல்,

விருத்தம்.

சிந்தைகளித்திட வெந்தைபிஷ்மராசன்
செல்வியாய் வந்துதித்த தங்கையாள
சுந்தரஞ்சேர்பெண்ணரசைவிட்டாவென்னச்
சொல்லியேபழிகூரி யெதிர்த்துநிற்கும்

மந்தமருக்குமனனைக்கண்ணனையைக்கண்டு
மனமாசட்புன்னகையும் செய்துமேலே
வந்திருந்தவானவருங்களிக்குமாரு
வாரினர்சாமனேயாய்த் தூரினரே.

இராகம்—பியாகடை—ஆதிதாளம்.

பல்லவி.

வாட்டினனே கண்ணன் வாட்டினனே.

அநுபல்லவி.

வாட்டினன் ருக்மனது கூட்டமாசேனையில் தாவி
நீட்டமாய்க்கரங்கள் வில்லில்
பூட்டியே வேகமாயேவி வாட்டினனே

சரணம்.

வந்தமணிரதங்களை வரிசையாய்பொடியாக்கி
மதகரிசிலவற்றை மாட்டியுயிரைபோக்கி
அந்தமிகுபுரவிகள் அத்திரங்கள்படநோக்கி
அலரியோடவுங்களால் அணிகலைந்தேகத்தாக்கி
ஆவெனும்பெருங்கோஷம்
அமருகள் அதிலெங்கும்மேவ அருகில்வற
அனைத்துச்சாரதிகளை
அப்பெனக்குலையெனச்சீவ உதிரம்எழ
காவலரெவர்களும்
கதரிப்பதரியெங்குந்தாவ காணுருசிலர்
கருதியிதென்னவென்று
கலங்கிமனதுமிகநோக வதைத்துமேலும்
இப்படிச்சிலரை அந்த யெமலோகமதிற்சேர்த்து
தப்பினவரையுமிக இத்தண்டிக்க தருணம்பார்த்து (வாட்)
எனதருஞ்சேனைகளை இப்படிநீயடிக்க
எற்குமோவுனைவிடேன் இவ்வுலகில்நடிக்க
தாஷ்டிகங்கொண்டவுன்னை தரணிதனிற்முடிக்க
தடையில்லை க்ஷணத்தினிற்பாராய் இப்பொழுதென்
சேவகத்திறமையைச்
செலுத்துகிறேன் சிறிதுநேராய் திருடன்போ
லனைபகறித்திடும்

இந்தபழிதன்னைச்சீராய் முடித்திடாமல்
தரித்திடி லுயிரினி
யுருக்குமனல்லநான் நேராய் எனச்சினந்து
அம்புகள்சொரிந்திடவே
அஞ்சவண்ணனுங்கண்டு
உம்பருமகிழ்ந்திடவே
ஓங்கியாயுதங்கொண்டு (வாட்)

உன்சமர்த்தும் என்சமர்த்தும் ஒருகைநில்பார்க்கலாம்
ஒன்தங்கையைமீட்கவந்த ஒன்ஆசையைநீக்கலாம்
சஞ்சலமிருந்திடில் சண்டையிற்றீர்க்கலாம்
சாமர்த்தியமிருந்தால்நீ சுகசமாய் ஏற்கலாம்
என்னுளிர்கணைகளை
எடுத்தவன்மீதினில்வரிய விடுத்தெதிர்த்து
இலகியசிலபடைகளை
இருநிசம,தில்மாய கண்டதுண்டமாய்
நின்றிடப்புரிந்து,திரது
புவியெங்கிலுந்தோய சிலவசுரர்
கிறையமர்க்களமகன்றோர்
திக்கினிலொளியு மூபாயமாகவேயோடி
சேர்ந்திடுமவர்களையுஞ் சின்னபின்னமாகச்செய்து
நேர்ந்திடுமவர்களையும் நின்றுதலைகளைக்கொய்து (வாட்)

தங்கையைக்கொணர்ந்தது யௌதவியென்னை அடித்தாய்
தயிரியமாகசில தாளைகளைக்கெடுத்தாய்
இங்குசூதாகவந்து யெங்கள்பெண்ணையெடுத்தாய்
யேகிமின்கோகுலத்தில் இருந்தவரை அடுத்தாய்
யேதுனக்கெத்தனைமதம் இடையர்வெனக்கூவி
இச்சிசுபாலனுக்கு யெனையென ஒனையீய்யம்
பிடுவொரோ அரிவின்றனுவி நாலைகாலும்
திதிமதியாசுவை
ஒனக்குளதோ இப்புவியி லெனவிகழ்ந்து
நெடுமுடைவாள்கதை யீட்டிகட்டாரிகளேவிசுபயோகிக்க
அத்தனையுமுருகணையாலே அடுத்தச்சுதனும்
இத்தரையில்தேவகியும் இஷ்டமாகுநற்சுதனும் (வாட்)

வசனம்.

இவ்வாறு கண்ணன் வந்தவர்களையும் ருக்குமனையும் புடைத்து நிற்கையில் ருக்குமன் கடுஞ்சினமடைந்து உடைவாளை உருவி தன்னை வெட்டவந்தவனை கண்ணன் பிடித்துக்கொண்டு உயிரை வாங்கும்படி உத்தேசிப்பதை அரிந்த ருக்குமணி கொல்லாமல் மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுதல்.

விருத்தம்.

இன்னவாயதஞ்செய்யு மவனைக்கண்டு
இடையிலுள்ளவாளதனை யுருவியோடி
பின்னமேசெய்யவரும் ருக்குமனைப்பார்த்துப்
பேசவொண்ணுக்கீர்த்தியுடைக் கண்ணன்றானும்
சன்னதமாய்பட்டயத்தைப் பிடித்துக்கொண்டு
சாதகமாய் உயிர்வாங்கப் போகும்முன்னம்
மின்னலெனுமிடையாள் திருவடியைப்பற்றி
மேலென்றாள் அண்ணனைவிட் டேலென்றே.

இராகம் சாமா ஜம்பைதாளம்.

கண்ணிகள்.

பிரதாவைக்காரும் பிருணேசாகீரும்
பாரியென்னுரைகேளும்
ஆளும்-தாளும்-இன்னாளும்-பறந்தாமனே
பாதகன்பிளையை க்ஷமித்திடும் சமித்திடும் சமித்திடும்
இவனைநீரடித்தால் என்னவருமடித்தால்
ஈரேளுலகுநாதா
வேதா-போதா-மலர்ப்பாதா-எதுகுலேசனே
வேணுயிரைக்காத்திடும்-காத்திடும்-காத்திடும்.
சரியானவருடன் சண்டைசெய்யக்கடன்
சத்துருவைமடியும்
நடியும்-படியும்-போர்முடியும்
ஜகத்காரணா.
மகனைவைத்திட்டால் மாதாபிதாகேட்டால்
மனத்துயரப்படுவார்
கெடுவார்-நடுவார்-உயிர்விடுவார்-கிருஷ்ணமூர்த்தியை
மைத்துனன் உயிரைக்காருமே-காருமே-காருமே.

வசனம்.

இந்த்விதம் சொல்லிய ருக்மணியின் உரையைக் கேட்டு மனதிரங்கிய கண்ணபிரான் ருக்மனைத் தேரிற்பிணித்து அவமானப்படுத்திய போது பலராமர்வந்து கட்டவிழ்த்து சமாதானம் நீதி யுரைத்ததைச் சொல்லுதல்.

விருத்தம்.

காருமென்றருக்மணியி னுரைக்கிதங்கி
கண்ணனுமக்கசடனுயிர் வாங்காமல்விட்டுப்
பாருமப்பாமைத்துனனே மரியாதைபின்று
பண்ணுகிறேன் உலகிலுள்ளோர் மெச்சுமாரு
தேருடனேயவனைநன்று யிருகக்கட்டித்
தீவாமாய் ஐங்குடிமியாய்சிரைக்க
ஆருமெதிரில்லாத பலராமன்வந்து
அடுத்திட்டான் நீதிசொல்லி விடுத்திட்டானே

இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

கிட்டாவுனக்கிந்தத் துஷ்டத்தனமேதடா
கிருபையாளனே யேதடா

அநுபல்லவி.

முட்டாளாகவேயவன் இருந்தபோதிலுந்தலை
மொட்டையடித்து முகமீசை சிரைப்பாருண்டோ

சரணம்.

சம்பதியாகவே யிருக்கும்பீஷ்மனுடை
தலைமகனுஇவன் மானமென்பதுகெட
கொம்பனையாளுக்கு கோபமனதில்பட
கொடுமைஇத்தனையாமோ கோபாலனேயடா (கிட்)
வெட்டினாலுஞ்சிரம் குற்றமில்லைஇந்த
விதமாகச்செய்தது மேன்மையாமோபொருந்த
கட்டினாய்தேரினில் கண்ணீருமவன்சிந்தக்
கபடநாடகாவுந்தன் கருத்தரியான்சொந்த (கிட்)
தேகபந்துவாக இருக்குருக்குமனுக்கு
தெரியாதவர்போல தீமைசெய்தாய்நோக்கு
வாகுடையவிந்த மாதுருக்மணிக்கு
வருத்தமுண்டாகாதோ வசையாமிதுஉனக்கு (கிட்)

சத்துருமித்துருக்களை சமமாகவேஎதும்
தம்பிஉனக்கிவன் இதென்னவெகுதூரதம்
உத்தமன் ராமதாசன் உன்னிடுவான்பேதம்
உலகினில்உனக்கிது உண்மையாய் ஆபவாதம். (கிட்)

வசனம்.

இவ்வாறு கண்ணனுக்குரைத்து ருக்மணியை நோக்கி பலராமன் சமாதானஞ்சொல்லி விசனத்தை யாற்றுதல்.

விருத்தம்.

கண்ணனருகணைந்திந்தவிதமேயாகக்
கடுங்கோபந்தனையாத்தி அடுத்திருந்த
வண்ணஎகுவாய்த்தருக் மணியைநோக்கி
வந்தவுனதண்ணனையும் பங்கஞ்செய்தான்
யெண்ணமாய் யென் தம்பிமேலேகோபம்
இப்பொழுதுநீகொள்ளா விதமேயாக
நண்ணவேநான்சொல்லும் வார்த்தைகேட்டு
நாமடைன்றுன் நடுநிலைமை தேடன்றானே,

கீர்த்தனை - இராகம் - சௌராஷ்டிம் - ஆதிதாளம்.

பல்லவி.

விசனப்படாதேயம்மா ருக்மணியம்மா
விசனப்படாதே சும்மா.

அநுபல்லவி.

விசனமேனினிமேலே வீணன்வாய்மதத்தாலே
பசையில்லாவார்த்தைசொல்லி பட்டபாட்டை நோக்கி
இப்படிபிழிவா இவ்விடம்வந்தடுத்து
செப்பவொண்ணாத கேலி செய்தவனுக்காக (விச

சரணம்.

முன்னம்நீசெய்தவத்தால் முகுந்தனேபதியாக
நன்னயமாகவின்று நாடியபடியாலே (விச
தேய்வதும் வளர்வதும் திங்களுக்கிலையோபாரில்
ஆவதுன்னண்ணன்செய்த அகந்தையை நீகண்டு • • (விச
சுக்ஷிசெய்தஇவன் காலகாலமட்டும்
ராமதாசன்போல் தாசன் நகைக்கசெய்தானேபார்த்து (விச

வசனம்.

இவ்வாறு பலராமர் சாதானஞ்சொல்லி கண்ணனை ருக்மணி யோடும் துவாரகைக்குஅழைத்துவரும்போது துவாரகையிலுள்ளோர்

எதிர்வந்து தக்க மரியாதையோடும் கூட்டி ஷை நகரம் சேர்ந்ததை சொல்லுதல்.

விருத்தம்.

ஓதுபலராமர்சொல் லுரையினாலே
ஒண்டொடியும்முள்ள திது என்னகண்டாள்
தீதுசெய்தருக்குமனுக்குண்டலிக்குத்
திரும்புவேன்கண்ணனைக் கொன்றனலென்று
வாதுசெய்யவே றாற்குபோனனப்பால்
வல்லாளிருவரும் ருக்மணியினோடு
கோதில்லாதுவாரகைக்கு வருதல்நோக்கி
கூறுவார்யெதிர்வந்து நேருவாரே.

கீர்த்தனை இராகம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

கிருஷ்ணனை யெதிர்கொண்டு வருகின்றார் அந்த
கேசவனுக்குந்தர் தருகின்றார்

அநுபல்லவி.

துஷ்டசம்மாரனுந் தோகையோடுவரக்கண்டு
இஷ்டாளனைவரும் இதையங்களிகொண்டு (கிரு)
குற்றவாளிகளைத்தடுத்து அந்தக்
கோதையோடுதேரிலடுத்து
உற்றகீர்த்திதனையெடுத்து ஓங்கி
ஊருக்கருகிலே நடித்து
உம்பரும்மகிழவே உச்சிதன்வீரநாடி
சம்பிரமமாகவே சகலர்களுங்கூடி (கிரு)
சத்திரசாமரங்கள் பிடிப்பார் அப்போ
சகலவாத்தியங்களும் படிப்பார்
கத்திதேவன்புகழ் படிப்பார் அந்த
காரணன் முன்னிலே நடிப்பார்
கணமானபூரண கும்பங்களுங்கொண்டு
இணமாகமந்திரம் எல்லோர்களும்விண்டு (கிரு)
துவாரகாநாதனைப் போற்றுவார் அங்கே
தூபதீபங்களை யேற்றுவார்
நிகரமானமலர் தூற்றுவார் அழகிய
நீலமேகனுக்கு சாத்துவார்

நேமமுடனுப சாரங்களுஞ்செய்து
மாசில்லாதபன் னீர்களுமேபெய்து (கிரு)
பேருயிரத்தானைப் பாடுவார் மகிழ்ந்து
பிரியமாயெல்லவருங் கூடுவார்
நேருசக்கூடியேயோடுவார் துணையாய்
நெருங்கியசேனை நாடுவார்
உச்சிதமங்கள வாழ்த்துகளுஞ்சொல்ல
மெச்சியேசேர்ந்தனர் மேன்மைசெய்யும்நல்ல (கிரு)
கக்ஷிசெய்தவரைமடிந்து நல்ல
கன்னிருக்மணிகைப்பிடித்து
தக்ஷணம் அன்புடனெடுத்து பசுந்
தங்கரதத்தினில்விடுத்து
தங்கியேசேயமுடன் தாமோதரன்வர
தன்மையாராமதாசன் தான்மகிழ்ச்சிதர (கிரு)

வசனம்.

கண்ணன் தாய்தந்தைமுதலிய பெரியோர்களை வணங்கி ருக்குமணியை யழைத்துவந்த சமாசாரத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

கூட்டமாய்த் துவாரகையிற் சேர்ந்தபின்பு
கோலமாயரமனைக்குள் நுழைந்தகண்ணன்
பாட்டன்முதற்பெரியோரை வணங்கியன்று
பயன்பெருகுமாசீர்வா-தங்கள்பெற்று
நாட்டமாய்பெத்ததாய் தந்தையரைக்கிட்டி
நாயகியுந்தானுமாய் யடியில்வீழ்ந்து
தேட்டமாய்நங்கைதனைக் கொணர்ந்தசேதி
தெரிவிப்பான் உள்ளபடி விரிவிப்பானே.

கீர்த்தனை இராகம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி

அளைத்துவந்தேனையா யரசன்மகளை
அனைத்துவந்தேனையா

அநுபல்லவி

அழைத்துவந்தேனையா அழகியருக்மணியை
தழைத்துமணம்புரிய தாரணியிற்சத்குணியை (அ)

சரணம்,

அண்ணனுதவியால் அனைவரையுஞ்செயித்து
வண்ணமுடையமாதின் வடிவையதிசயித்து (அ)
குவலயத்தோரிகழ் கொடியருக்குமன் தன்னை
அவமானமதுசெய்து அடித்தோட்டியுன்முன்னே
நமதுமனதுக்கு நன்றாயிசைந்துசெல்லும்
குமரியிவளையானுங் கொணர்ந்தேன் இஷ்டத்தைசொல்லு
சிசுபாலனுக்கென்று செப்பிஇருந்தவளை [ம்
சுசியுள்ளநீற்மகிழ் சுந்தரியாம் இவளை
பக்ஷமாய்என்னைச்சேர பார்வதியைப்பூசித்தாள்
ராமதாசன்மகிழும்படி லலிதமாய்நேசித்தாள். (அழை)

வசனம்.

கண்ணன் இவ்வாறு சொன்னதைக்கேட்ட வாசுதேவர் துவாரகாபதியை அலங்காரம் செய்யும்படிக்கி உத்திரவானபடி சொர்ணமயமாய் அலங்கரித்த மண்டபத்தில் சகல ராஜர்களுக்கு மண ஓலையெழுதி அனுப்பும்படி திட்டஞ்செய்தல்:

ஸ்ரீ ஆழ்வார் திருவடிளே சரணம்.

விருத்தம்.

யகனுரையைகேட்ட வசுதேவருக்கு
மாராதமகிழ்பெருக வுடனெழுந்து
இரமதிலேபீஷ்மன்முதற் கிரீடஞ்சூடும்
ஏர்பெருகும்ராஜாக்க ளனைவருக்கும்
சுகமாகமணவோலை யெழுதச்செய்து
சுந்திரமாய்வேண்டியவை சேர்க்கச்சொல்லி
மிகமேலோர்களிக்க நகரலங்கரித்தல்
மெய்யென்றார் மனப்படியே செய்யென்றாரே.

கீர்த்தனை-இராகம்-உசேனி-அடதாளம்.

பல்லவி.

பட்டணம் அலங்கரித்தார் திருமணம்
கிட்டனுக்கென்றுரைத்தார்.

சரணம்.

பட்டணந்தன்னில் பவளத்திறற்கால்கள்
பாங்காகவேநாட்டினார் அதில்

திட்டமதாய் நவரத்தினத்தாற்பல
விட்டங்களும் பூட்டினர். (பட்டணம்)

கோலமாகதக் கற்களினுலே
கொடுங்கைகளுங் கூட்டினர் மிக
மேலும்பசும்பொற்றகடுகள்ஜோதியாய்
மீதிலெங்குந்தீட்டினர். (பட்டணம்)

வண்ணமமைந்த பசுங்குலைகளுள்ள
வாழைகமுகு நட்டார்மேலே
எண்ணறிய மகரதோரணங்களும்
எங்கினு மாடவிட்டார். (பட்டணம்)

சந்தனத்தாலே தரையும்மெழுகியே
சங்கினுல்கோலமிட்டார் அந்த
மந்தகாசனுக்குத் திருகலியாணமென்று
மங்களம் பாடப்பட்டார் (பட்டணம்)

அம்பொன்திகளும் மணப்படிகளிட்டு
அரசாணிகாலும் வைத்தார்எங்கும்
வம்பவிழுமலர் மாலைகளுந்தூக்கி
மனதிற்சந்தோஷமிட்டார். (பட்டணம்)

கோபாலனுக்குத் திருமணமென்றுளிர்
கொடிவிளக்குகளேற்றினர்வந்த
பூபாலபீஷ்மன் புதல்விசுபமென்று
பொஷ்பங்களுந் தூற்றினர். (பட்டணம்)

பூரணபொற்கொடம் வைத்துமந்திரங்கள்
பூசுரரும்ஓதினர் அன்று
சீருகபதினெட்டு வாத்தியம் நகரத்தில்
செம்மையாக ஊதினர் (ட்டணம்)

பீஷ்மன்புத்திரியைக் கொண்டுவந்தானென்று
பெருமையாகப்படித்தார் ருக்மணி
பூசித்தவண்ணம் மணம்முடிந்ததென்று
புகழ்ந்தவர்கள் நடித்தார். (பட்டணம்)

வசனம்.

பீஷ்மன்முதல் சகல ராஜாக்களும் பந்துஜனங்களும் முனிவர் ரிஷீஸ்வரர்கள் முதலிய பெரியோர்களும் கண்ணன் திருக்கல்யாண

மஹோற்சவத்தைக்கண்டு களிக்கும்படி துவாரகையில் வந்து சேர்ந்த வைபவத்தைச் சொல்லுதல்.

விருத்தம்.

அலங்காரம் செய்திருக்கும் நகரத்திற்கு
அழகுமுடிகிரீடாதி மன்னர்கூட்டம்
கலக்குமனக்கவலைதன்னை நீக்கிநிற்கும்
கானகத்துமுனிவரெல்லாம் சேர்ந்தபின்னர்
நிலம்புகளுமிந்திராதி தேவர்கூடி
நேராகவிண்ணின்று பார்த்திருக்க
நலங்கமழும்மணவோலை கண்டபீஷ்மன்
நாடிநான் துவாரகையிற் கூடினனே.

கீர்த்தனை-இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

இராஜனும்பீஷ்மன் மகாராஜன்வசுதேவன்
வாழுமனைக்கு வந்தானே.

அநுபல்லவி.

வாசுதேவகிமைந்தன் மணவோலை தன்னைக்கண்டு
ஆசையுடனேபர மானந்தமதுகொண்டு (இரா)

சரணம்.

கத்திவருங்கரியும் கனைத்துவரும்பரியும்
முத்துக்குடையுந்தேரும் முறையாய்க்காலாள்களும்
வெற்றியரசர்களும் விழைபலதேசத்தாரும்
சுற்றமுடன்கன சந்தோஷமாய்த் துவாரகையில்
ஜோதிமிகுந்துவரும் பேரிகையாதி முளக்குந்தரும்
சுகுணமேவுஜெயவிருதுகள்வீற
சூரர்வீரர்களுங் கட்டியங்கூற
மகரதோரணங்கள் வரிசையாயிலங்க
மாதர்நடனமாட மங்களம்பாட
இங்கிதம்நீட கொண்டாட. (இராஜ)

தங்கபல்லக்கிலுற்ற தனருக்மணியைபெற்ற
மங்கையாந்தாய்முதலாம் வண்ணவஞ்சிமார்கள்
பொங்கமாயலங்காரம் பூண்டுஇருக்கின்றதாதி
நங்கையரனைவரும் நன்முகமலர்கொண்டு
நலமுடன்புடைசூழ கோரியை
வலமதுவந்து தாள

நாடியுசித வெண்கவரிகள் வீச
நண்ணியெச்சரிக்கை நாரியர்பேச
கூடிபூமகளும் குலவுநற்றுவாரகையும்
குடிகள்மகிழ்ச்சிசேற வெடிகளதிர
முடியொய்யார உதார (இராஜ)
ஓங்குவாசுதேவர் உறவினர்யாவரும்
தீங்கருமறையவர் திரளதூலமாய்
தாங்கியபூரண தங்கக்குடங்களோடு
பாங்குடன்மந்திரங்கள் பரிவுடன்னோதிவித்து
பயனுறயெதிர்சென்று சீர்பெரு
சுயபதிமுன்னின்று
பச்சமாகமரியாதை தறவே
பதியைநாடியனைத்தினிதுடன் வறவே
ராமதாசன்கோருமுயற் துவாரகைநகரில்
நன்குவிடுதிகொடுத்தார் சங்கைவிடுத்தார்
செங்கைகொடுத்தார் அடுத்தார். (இராஜன்)

வசனம்.

பீஷ்மராஜன் துவாரகையில் சேர்ந்தபின்பு அவருக்குத்தக்கவா ருமரியாதை புரிந்து விடுதியும் தந்து வாசுதேவர் திருக்குமாரனாகிய கண்ணனைநோக்கி ருக்மணியை பீஷ்மராஜன் விடுதிக்கனுப்பி அவளுடைய தாய் தந்தையரோடு கல்யாண மண்டபத்துக்கு வரும்படிச் செய்ய சொல்லுதல்.

விருத்தம்.

மகபதியும்மகிழபீஷ்மன் துவாரகைக்கி
மனமாரவந்திட்டானென்னபின்னற்
சுகமாகவாசுதேவர் மகனைச்சுட்டி
சுந்தரஞ்சேர் ருக்மணியை தந்தையின்பால்
புகளுநாமனுப்பி மணக்கோலத்தோடு
புதுமைபாயவர்கொண்டு வறவேசெப்தால்
மிகமேலாம்மெனதிஷ்ட்ட கண்ணநல்ல
மிதமென்றாரென் நருத்தையுதவென்றாரே.

இராகம்-ஜாவளி-சாபுதாளம்.

பல்லவி

கிஷ்ணவென்சொற்கேளடா ஹ ஹ ஹ
கிருஷ்ணவென்சொற் கேளடா.

அநுபல்லவி.

இஷ்டமுடனுளடா ஹ ஹ ஹ. (கிருஷ்ண)

சரணம்.

குண்டின்பதிபுத்திரியை அவன்
அண்டையில் சேர்மித்திரியை (கிருஷ்ண)
பன்னுமிதுகஷ்டமானாலும்
சொன்னபடி யிஷ்டமா (கிருஷ்ண)
அனுப்பவுஞ்சம்மதியாயென்சொல்
இனிப்புாநிம்மதியா (கிருஷ்ண)
உந்தன் இஷ்டம் என்னடா சற்
றெந்தனுடன் பன்னடா (கிருஷ்ண)
ராமதாசன்தரம் நடிக்கமிகு
பக்ஷமணம் முடிக்க (கிருஷ்ண)

வசனம்.

கண்ணன் தன் தகப்பனுடைய இஷ்டப்படியே செய்வது தனக்குஞ்சம்மதமென்று சொன்ன உடனே ருக்மணியை பீஷ்மராஜன் விடுதிக்கு அனுப்பபோக அங்கே யவர்கள் சிங்காரஞ் செய்த வைபவத்தைச்சொல்லுதல்.

விருத்தம்.

தந்தையுரைகுருவார்த்தை யாகக்கொண்டு
தன்மனமுமப்படியே யெண்ணக்கண்ணன்
சிந்தைமகிழ்வாகி வசுதேவரன்று
சிறப்பாகப்பூவையரை யொன்றுகூட்டி
விந்தைமிகும்பதினெண் வாத்தியமுளங்க
விபவமாய்ப்பீஷ்மனிடம் போகச்செய்யப்
பந்தமாய்நலங்காதி ருக்மணிக்குப்
பண்ணினர் அலங்கரித்து நண்ணினரே.

இராகம்—முகாரி—சாபுதாளம்.

பல்லவி.

சிங்காரஞ்செய்தார் ருக்மணியை
சிங்காரஞ் செய்தார்.

அநுபல்லவி.

சிங்காரங்கள் செய்தார் நன்று
ஸ்ரீகிருஷ்ணனுக்கென்றவர்களன்று (சிங்கா)

சரணம்.

தாமரைப்பூங்கழல்கள் தன்னில்
  தண்டைசிலம்புகள் கூட்டி
கோமளமேனிக்கிசைந்த
  ஸ்ரீகோலப்பணிகளும்பூட்டி மேலும்
கங்கணந்தோள்வளையோடும்
  கையில்வங்கிகள்தொடுத்து
தங்கவொட்டியாணம் சேலை
  தையலிடைதனிலுடுத்து (சிங்கா)
கண்டசரங்கள் பதக்கம்
  கல்லிழைத்த அட்டிகைமாட்டி
கொண்டைக்கலங்காரமாக
  கொடைமல்லிமுல்லைகளுஞ்சூட்டிமின்னும்
பத்தரைமாற்றுள்ள தங்க
  பவளக்குண்டுகளேற்றி
முத்துமூக்குத்திநத்து
  மூக்கில்விளங்கவேசாற்றி (சிங்கா)
காதில்லோலைசிமிக்கி
  கமலசாங்களுமிட்டு
மாதுமுகந்தனில்நல்ல
  மணமாம்கஸ்தூரிபொட்டு சொல்லும்
ராமதாசன்போல்ருக்மணியும்
  நானிலத்திலேகளிக்க
பக்ஷமுடன்கண்ணனுக்கே
  பாரியாக அவசளிக்க (சிங்கா)

வசனம்.

இவ்வாறு ருக்மணிக்கு தாய்வீட்டில் கல்யாணநலுங்கு முதலிய வைபவங்களுஞ் செய்துகொண்டிருக்கும்போது வசுதேவர் தன் திருகுமாறனுகிய ஸ்ரீகண்ணனுக்கு மணகோலம் செய்யும் பெருமை சொல்லுதல்.

விருத்தம்.

சிங்காரநலுங்குமுதலாகச்செய்து
  செய்ததவப்பலப்பிராப்திருக்மணிக்கு
பொங்கமாய்க்கண்ணனே பதியாய்வாய்த்த
  புண்ணியத்தையோசிக்கிற் பந்துக்களோடு

துங்கமாய்புரோகிதர் பந்துக்களோடு
தூமணிநேர்மைந் தன் தன்மணக்கோலத்தை
இங்கிதமாய்ச்செய்யவசுதேவரன்று
எடுத்திட்டார் மதிமாரோடுடுத்திட்டாரே.

இராகம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி.

மணவாளக்கோலங்கொண்டானேமாயன்
மங்கைருக்மணி மகிழும்படியேஆயன்

சரணம்.

பணிவாளரவணை மீதினிற்படுத்தோன்
பாரினில்மானிடர் போலுருவெடுத்தோன்
அணையவேமாதினை அன்புடனடுத்தோன்
அம்புவிமீதினில் அதிசயங்கொடுத்தோன் (மண)
இலகுபொன்னுடை இடையினிற்றரித்தோன்
எழில்மிகுஆபரணம் இசையவேபரித்தோன்
நலமுடன்சிகைமுடி நாடியேவரித்தோன்
ஞாணயமேனியில் நறுமணம்விரித்தோன் (மண)
புன்னகையானுக்கு பூமலர்களும்சாத்த
போதவும்கற்பூர தீபங்களுமேற்ற
மன்னிய ஆராத்தி மகிழ்வாகவுமாற்ற
மாதர்களிருபுரம் வாழ்த்தியும்போற்ற (மண)
வட்சஸ்தலந்தன்னில் வனமாலைநீண்டோன்
வாசமாய் ராமதாசனை மார்பினிற்பூண்டோன்
பட்சமாய்கோதையை பாங்குடன்மீண்டோன்
பாகவதர்களை பரிவுடனாண்டோன்
மணவாளகோலம்கொண்டானே மாயன்
மங்கைருக்மணி மகிழும்படியே ஆயன்

வசனம்.

இவ்வித வைபவங்களோடும் கண்ணனை வாசுதேவர் பீஷ்மராஜனுடைய விடுதிக்குக் கொண்டுபோய் ருக்மணியை தன் குமாரனுக்கு திருமணஞ்செய்து கொடுக்கும்படிக்கேழ்க்குதல்.

விருத்தம்.

இவ்விதமாய்த்திருமகனைக் கோலத்தோடும்
எழிற்பீஷ்மன் விடுதிக்கு வசுதேவர் தானும்

செவ்விதரும்கிளையோடு மமைச்சரோடும்
சீராயவ்வாசனிடம் சேர்ந்தபின்னர்
இவ்வுலகவாழ்க்கை மரியாதையைப்போல்
இயல்பாகருக்மணியாஞ் செல்விதன்னை
திவ்வியமாய்மென்கண்ணன் தனக்களித்த
தேமென்றுர்நின்கருத்தைக் கூறென்ருரே.

இராகம்-ஸ்ரீராகம் ஆதிதாளம்.

பல்லவி

கன்னியைத்தரல்வேண்டும் கண்ணனுக்குந்தன்
கன்னியைத்தரல் வேண்டும்.

சரணம்.

கன்னியைத்தரல்வேண்டும் கருத்ததனைபன்னும்
மன்னிய அழகுள்ள மாதுருக்மணியென்று (கன்)
சந்திரபிம்பத்தையொத்த சரசமுகத்தாளாம்
மந்தகாசனிடம் மகிழும்அகத்தாளாம் (கன்)
அந்தமாம் உவமைக்கு அன்னநடையாளாம்
செந்திருமால்மெச்சும் சிறந்தசிற்றிடையாளாம் (கன்)
மங்கையர்வியந்திடும் மானொத்தவிழியாளாம்
பங்கயகண்ணனுக்கும் பதமாம்நன்மொழியாளாம் (கன்)
பட்சமாய்க்குலத்துக்கு பாக்கியம்போன்றவளாம்
ராமதாசன்நாதனுக்கும் ரம்மியமானவளாம். (கன்)

வசனம்.

இவ்வாறு வசுதேவர் பீஷ்மராஜனை ருக்மணியை தன் குமாரனாகிய கண்ணனுக்குத்தரும்படி கேட்டதற்கு அவர் சம்மதித்து தன் புத்திரியோடும் வசுதேவருடைய அரமனைக்கு வருகிற வைபவத்தை சொல்லுதல்.

விருத்தம்.

தருநிகராம்வள்ளல் வசுதேவரன்று
தரல்வேண்டும்ருக்மணியைப் பிள்ளைக்கென்ன
வரும்பெரியநிதியாக மனதுட்கொண்டு
வையமதிற்செய்ததவப்பலனிதென்று
பெருமையுருமென்புதல்வி தன்னைஇப்போ
பின்னேடேயழைத்து வந்துமணமேசெய்து
திருமகளைத்தருமாறு வருகும்போது
தெருகின்ருள் சேவையதுதருகின்ருளே.

ருக்மணி கலியாணம்.

இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

மாதுருக்மணிவந்தாளே யவர்கள்கண்டு மகிழ்ந்சேர்வை தந்தாளே,

அநுபல்லவி

மாதுருக்மணிவந்தாள் வானவர்கண்டறிய
சீதமலர்மாரி சேர்ந்தவர்கள்சொரிய (மாதுருக்மணி)

சரணம்.

தாமரைத்தாள்சொலிக்கவே கலகலவென்ன
தண்டைசிலம்பொலிக்கவே
க்ஷேமம்மிகப்பலிக்கவே தொடையிரெண்டும்
செவ்வாழையைக் கெலிக்கவே
சித்திரக்கொடியை நிகர்த்திடுமிடைமின்ன
செப்பையொத்த கும்பஸ்தமிரண்டுந்துன்ன
சுற்றமேவும்சங்கு கண்டவடிவேயென்ன
சோதிமதிமுகமும் துடங்கிடவேசொன்ன (மாதுருக்மணி)
தங்கசேலையுந்துலங்க ரத்னப்பணிகள்
தகதகவென இலங்க
பொங்குமாலைகளலங்க மல்லிகைமுல்லை
பொலிகுழல் மிசைநலங்க
பூசும்அத்தர்சவ்வாதுகள்வீச
புதுமையாக வெல்லோர்களும்பேச
மாசில்பாங்கியர் சூழஉல்லாச
மதிமிகுந்தாதி சரசப்பிரகாச (மாதுருக்மணி)
வானவரெல்லோரும்புகழ நகரமெங்கும்
மங்களவாத்தியம் திகழ
ஆனமங்கையர்மகிழ கோரியபடி
அற்புதம் மணம்நிவழ
அந்தமாகவே விருதுகள் தாவ
அரசர்கள்யாவரும் ஆனந்தமேவ
விந்தைரம்பையர் விண்ணிதுலாவ
மெல்லியர்கதம்பபொடிமிசைதூவ (மாதுருக்மணி)
சேவையைக்காணப்போகுமோ வர்ணிக்கஆதி
சேஷனாலும் ஆகுமோ
பாவைசவுரியின்மோகமோ நிரைவேச
பண்ணின தவபாகமோ
அவனிமீதில்மிகு அறிவுடையோரும்
அன்றுராமதாசன் அகமகிழ்ந்திற்கோரும்
கவலைபோக்கிவரும் கண்டியர்சீரும்
கருதிமகிழ்ந்துமிக்க கனகூடஞ்சேரும் (மாதுருக்மணி)

வசனம்.

ருக்மணி அரமனேசேர்ந்தபின் கண்ணனே உலக வழக்கம்போல் பரதேசம்போகும்படி செய்தப்பெருமையை சொல்லுதல்.

விருத்தம்.

மா ஆருக்மணிகண்ணன் மனேபுகுந்த
மாட்சிமையைகண்டடனே மனதுபொங்கி
தீதகலவிரதாதி பூசைமுற்றும்
திவிரமாய்செய்தவர்கள்முடிந்தபின்னர்
ஓதுமலர் குலதர்ம வளக்கம்போல
உல்லதிருவாத்தியத்தின் முளக்கத்தோடும்
சாதுயெனும்பரப்பிர்ம சொரூபனங்கே
சார்ந்திட்டான் பரதேசம் நேறந்திட்டாரே.

இராகம்-சாமக்கிரிகை-ஆதிதளாம்.

பல்லவி.

பரதேசம்வருகின்றான் பாலகிருஷ்ணன்
பரதேசம்வருகின்றான்..

அநுபல்லவி.

பரதேசம்வருகின்றான் பாவ[illegible]மாய்முடித்து
விரதம்அனேகஞ்செய்து வித்தகனும்நடித்து (பர)

சரணம்.

பொருவில்லாக்கல்யாண பேரிகையுமடிக்க
பூச்சக்கிரவாள்க்குடை பொற்புரவேபிடிக்க
திருவுருவாமந்த தேவிமணமுடிக்க
ஜெயவிஜயாவென்று கட்டியமும்படிக்க (பர)
ஆனேமேலம்பாரிவைத்து அரசர்வர
ஆயிரநாமனுக்கவர் உபசாரந்தர
வானத்தில்தேவருடைய வாத்தியங்களதிர
வஞ்சியர்கற்பூர ஆற்திகொண்டெதிர (பர)
கானமுனிவர்களும் கண்ணனிடத்திற்கூட
கற்புடைமங்கையற் களித்துமங்களம்பாட
தூஷவர்கண்டுடன் தரியாமலேயோட
தையலற்கள்கூடித்தங்கிநடனமாட (பர)
தோரணபாஷயம் தொடுத்துமுடியிற்கூட்டி
சோபனத்தண்டுலம் தோள்தணில்மாட்டி
காரணமாகவே கண்ணில்மஞ்சந்தீட்டி
கமலத்திருவடியில் பாதுகையும்பூட்டி (பர)
பொஸ்தகமும்கையில் பொற்பிறம்புந்தொட்டு
புனுகுஜவ்வாதுடனே புதுமலருமுடித்து
அஸ்தத்தில்விசிறியும் அந்தமாகக்கொடுத்து
அன்புடனினிதான வசனங் ளும்படித்து (பர)

ருக்மணி கலியாணம்.

காடிராமனும் பீஷ்மன்பரிமளிக்க
நங்கைகளபந்தருமாறு ஊரிகேளமளிக்க
நீடியதன்குலம் நிலத்திற்றளிக்க
நெருங்கிய ராமதாசன் நெஞ்சமதுகளிக்க (பர)

வசனம்.

பரதேசம்போன கண்ணனை மாமனாகிய பீஷ்மன் சமாதானம் சொல்லி அழைத்துவந்து திருக்கலியாணமகோத்ஸவும்கொண்டாடிய வைபவத்தைச்சொல்லுதல்.

விருத்தம்.

பரதேசம்போனவரை அழைத்துவந்து
பசவைருக்மணியுமே தோள்மேல்வைத்து
வரமென்ன இவள்பெற்றாளென்றுவந்தார்
வாயாரவாழ்த்திப்பூமாலைமாற்றி
தரமாக பொன்னூஞ்சல் மீதின்னேரை
தக்கவே செய்துகல் விசைகள்மாட்டி
ஸ்ரீதிமதன்போலவே மனேமேலேற்றி
வெய்திட்டார் திருமணஞ் செய்திட்டாரே.

இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

அச்சுதன் திருக்கல்யாண வைபவஞ்சொல்ல ஆனந்தமெங்குமாகுமே.

அநுபல்லவி.

மெச்சும்புகழொடு மேட்டிமையாயுய்யும்
மெல்லிருக்மணிதனை வியந்திடவேசெய்யும் (அச்)

சரணம்

அருமறையந்தண ரனைவரும்வந்திருக்க
அனபுவிமன்னர்கள் அண்டியங்கேதரிக்க
திருவளர்பலபல திரச்சிசெய்துநெருக்க
தெளிவுளக்கண்ணனைக் கண்டுஉடல்பெருக்க
தெருவைமார்களும் தெரியவே திகழும்
தீரர்யாவரும் திருமதைப்புகழும்
அறிவுள்ளமுனிவரர் அகமதில்மகிழும்
ஆசைதம்பதிகட் கற்புதம்நிகழும் (அச்)
ஸ்ரீதவன்ருக்மணியோடு திருமணப்படிதங்க
தேர்ந்தகாற்கேயராங்கு சீருடனேயிலங்க
பூவினிலதிசுப்பூரிசின்னமுளங்க
புதுமணமாலைகள் பொருந்திமார்பிற்றுலங்க
புகழவேதசாஸ்திர முறையோடும்சொல்ல
பொங்கும்விஷ்வக்சேனர் பூசையைப்புல்ல
நிகரில்பாலிகைகள் நிகழ்ந்திடவல்ல
நின்றுபாதபூசைப் புரிந்திடுநல்ல (அச்)

மாமன் பீஷ்மராஜன் மரியாதையொடுதக்க
வகைவகைதானங்கள் விளங்கியங்கேயெடுக்க
க்ஷேமமாய்க்கூரைச்சேலை சிலம்பொலியாட்கொடுக்க
செந்நெல்குவியில்மன்னன் செல்வியுமேயடுக்க
சீர்மிகுந்தமாங் கலியமுஞ்சாற்றும்
சேடிமார்கள் ஜெயமங்களம்போற்றும்
நேற்மையானவர் நிரைமலர்தூற்றும்
நீதியுடைய ஓமங்களும்மாற்றும் (அச்)
மாதின்விரல்பிடித்து மணவாழனுமுகந்து
மண்ணிய அரசாணிக்காலினைவலம்வந்து
ஆதிவளக்கம்மம்மி மிதித்தருந்ததிமுந்து
அமருங்கற்பினாள்கண்டு அன்புடனேபுகழ்ந்து
நீடுபடியிலிருவோர்களும்மன்னும்
நிமலவேதியர்கள் ஆசிகள்பண்ணும்
ஆடும்வேசியர் அபிநயந்துன்னும்
அருணவமாற்கள் தரும் ஆர்த்திமின்னும் (அச்)
விரைகமலம் பன்னீரும் வீசிப்பூச்செண்டெடுத்து
மேலானகதம்ப கஸ்தூரியுமேதொடுத்து
புரையிலாசிபகர் தாம்பூலமும் அடுத்து
பூரியதட்சிணைகளும் பொலிவாகவேகொடுத்து
பொங்கமாகவே பொடிகளுந்தூவும்
பொருவில்லாது மஞ்சனங்களுமேவும்
துங்கமான்மண விருந்துகள்யாவும்
துலங்கியேபந்துக்கள் மகிழ்ந்துஉலாவும் (அச்)
விண்ணின்றுகந்திருவர் வீணைகொண்டுமீட்ட
மேனகைஊர்வசி மீதினிற்கைகாட்ட
எண்ணருமங்கையர் இனியமுகங்கிட்ட
எக்களித்தானந்தம் மங்களமுங்கூட்ட
துங்கமுனிவர் அனுக்கிரகம் வளரும்
தூயசாமளன் எதுகுலந்துளிரும்
செங்கைமால்விரலில் மோதிரமொளிரும்
சிந்தைஇருகராமதாசன் சேர்மிகக்குளிரும் (அச்)

வசனம்.

கண்ணனும் ருக்மணியும் ஊஞ்சலாடிய வைபவத்தைச் சொல்வது

விருத்தம்.

திருமணமும் வைபவமாய்ச் செய்தமேலுந்
தேயத்துவனக்கமதை யனுசரித்து
இருவிசும்பிற் றேவர்நின் றெக்களிக்கமின்னல்
இசையாரும் பலவாறு பாடியாட

மருவுதரும்புஷ்பத்தா லலங்கரித்து
மண்டபத்தில் மணப்பலகை தூக்கிவிட்டு
உருவுதனிலொப்பில்லாப் பெண்ணும்பிள்ளை
ஊடினார் இருந்தூஞ்ச லாடினாரே.

இராகம் பைரவி.

சுந்திரமாஞ் செம்பவழக் கால்கள்நாட்டி
ஜோதிமணிவைரத்தால் விட்டம்பூட்டி
அந்தமிகுதங்கச்சங் கிலிகள்மாட்டி
அற்புதமாய் மாகதத்தால் பலகைகூட்டி
கந்தமலர் மாலையணிந் தின்பமாகக்
காந்திதரவேயதர்மேல் வீற்றிருக்க
விந்தைசெரி கண்ணபிரா னாடரூசல்
மெல்லிருக் மணியுடனே னாடிரூசல்
இந்திராதி தேவர்களா லிழைத்தவூசல்
எழில்மலரோன் தானுகந்தே யேற்றுமூசல்
சொந்தமொடு பிஞ்சகனுந் துதிக்குமூசல்
சொல்லரிய முனிவர்களும் பணியுமூசல்
சந்திரனுஞ்சூரியனும் போற்றுமூசல்
சற்சனராம் பாகவதர் சாற்றுமூசல்
புந்திமிகுகண்ணபிரா னாடிரூசல்
பூவைருக்மணியுடனே யாடிரூசல்
நவரத்தினக்கசிதமணிப் பணிகள்மின்ன
நல்லபீதாம்பரமாந் துகிலுமின்ன
சுவர்க்கமது மாமலர்கள் முடியிற்சூட்டி
சுந்திரமாங்களபகஸ் தூரிதீட்டி
உவமையில்லாத் திவதப்பொட் டிட்டனேக
உம்பர்களுந் துதித்தாட வுசிதமாக
புவனமகிழ் கண்ணபிரா னாடிரூசல்
பொன்னிருக்மணியுடனே னாடிரூசல்
மதிவதன சரஸ்பதியோர் வடந்தொட்டாட்ட
மாயனது தங்கையுமோர் வடந்தொட்டாட்ட
சதிராக இந்திராணியுமோர் வடந்தொட்டாட்ட
சரலட்சுமியுமோர் வடந்தொட்டாட்ட
அதிவடிவ அருவையர்கள் கவரிவீச
அன்பர்களும் அற்புதத்தைக் கண்டுபேசு
துதிசெய்யுங் கண்ணபிரா னாடிரூஞ்சல்
தோகைருக்மணியுடனே னாடிரூஞ்சல்

லாலிவிருத்தம்.

ஊஞ்சலிருந்தாடினா ருலகமெச்ச
உள்ளபெரியோர்மறையோ ருகழ்ந்துவாழ்த்த

பாசபந்தசூழ்வினைக ளெல்லாமோட
பத்தருக்குஞானமதி யன்றுகூட
வாசலிலேவந்தவர்கள் கூட்டமாக
வஞ்சியாதம் இசைகேட்டு மகிழ்ச்சியாக
ஏசவிலாமங்கையர்கள் திரண்டுநின்று
உடுத்திட்டார் லாலிசொல்ல அடுத்திட்டாரே.

இராகம்-சஹானா-சாபுதாளம்.

லாலி லாலி லாலி லாலி லாலி நந்தகுமாரா நவநீத சோரா (லாலி)
கோலருக்மணிமகிழுநாதா அந்த கொற்றமாபலிபுவியளந்திடும்பாதா(
சீலமிகுந்திடும் வேதா ஆயச்சேயிழைதம்முடனும்விநோதா(லாலி)
உலகமுண்டபெருவாயா வான உத்தமர்க்குமூர்த்த மளித்தவுபாயா(லா)
இலகியபிரகலாதனநேயா யாரும் இச்சிக்கும்வசுதேவர்நீண்டனச்சே
ஆதிமூலமெனவந்தாய்யானை ஆபத்தைநீக்கி யபயமுந்தந்தாய் () யா
அம்புவியோர்களும்பாலா உயர் அண்டருக்மகன்னுளுமதியனுகூலா (
நம்புமன்பரைக்காக்கும்லீலா நல்லநற்றவர்போற்றிடுநாகணும்மேலா(
திருவேங்கிடத்தமர்நாதா என்னும் தேவிலெட்சுமிமார்பில் தாங்கிய

எச்சரிக்கை விருத்தம். மோதா ()

லாலி இந்தவிதமாகப் பாடியன்று
லட்சுமிபோற்பெண்களுமே கூடிநின்று
ஆலிலைமேற்பள்ளிவிடுந் தாயரோடும்
ஆடிநிற்குமெம்பெருமான் வைபவத்தை
நூலின்முறையிடுமாறு சொல்லவெண்ணி
நூதனமாய்க்கல்யாணக் கவிப்பைகாட்ட
ஏலவேதிருமாலி னவதாரமுற்றும்
ஏற்றுவாரெச் சரிக்கையினாற் போற்றுவாரே.

இராகம்-நாதநாமக்கிரியை-சாபுதாளம்.

எச்சரிக்கை.

மேர்சுவரைகொண்ட சோமுகாசூரனுக்காகவெண்ணி
மச்சவதாரஞ்செய்த மாயாவெச்சரிக்கை
ஆரவமுடன் அமரர்தமக்கன்று அமுதளித்த
கூர்மாவதாரஞ்செய்த குணவாவெச்சரிக்கை
மேதினியையளிக்கும் பொருட்டாகவிருப்புற்று
ஆதியில்வராகவுரு வானாவெச்சரிக்கை
சீருடையபிரகலாதனன் சிறந்தபக்திக்காக
நரசிங்கவதாரஞ்செய் நாரணாவெச்சரிக்கை
பூமாபலிப்புவியைகொள்ளப் புந்திதனிலெண்ணி
வாமனவதாரஞ்செய்த வண்ணாவெச்சரிக்கை
ஆவலுடனேசூரர்தமை அடக்கப்புவிதன்னில்
மூவர்களுமெச்சும் மூலராமாவெச்சரிக்கை

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவருக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், திருச்சினாப்பள்ளி டிஸ்டிரிக்ட் மணப்பாரை போஸ்ட் மான்பூண்டி நல்லேந்திரசுவாமி ஊர் பஜனை மடம் ஸ்ரீரெங்கம் இலுப்பூர் உபாத்தியாயர் கண்ணாயிரம்பிள்ளை குமாரர் ராமதாசனாகிய நான் அச்சிட்டு ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இந்த புஸ்தகத்தை என்னுடைய அனுமதியன்னியில் யாரேனும் அச்சிடுவாராகில் 1867-வருஷத்திய 25-வது ஆக்ட் 20-வது பிரிவின்படி நான் கோரும் நஷ்டத்துக்கு இன்டியன்பின்னல் கோர்ட் என்னும் ஆக்ட்படி குற்றத்திற்கும் உத்திரவாதிகளாகவேணுமென்பதை கவனிக்க கோருகிறேன்.

பின்னால் இன்னும் என் தகப்பனாரால் பாடிவைத்திருக்கிற கண்ணன் திருஅவதாரமுதல் ஆழ்வார்கள் பாடி ஆனந்தமாய் மங்களாஸாஸனஞ்செய்தவாக்கியங்களும் பரமபாகவதாள்கீர்த்தனங்களும் சிங்காரமாய்ப்பாடியதை மூன்றும்பாகமாய் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

இ. க. ராமதாசன்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.